# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 32 ● 15 செப்டம்பர் 1970 ● பக்கங்கள் 8 ● விலே சதம் 10


### மாசேதுங் சிந்தனை

''கல்லொன்றைத்தூக்கி தன் காலில் போடுவது'' என்பது குறிப்பிட்ட சில முட்டாள்களின் செயல்களைப் புறக்கணிப்பதற்குச் சீன மக்கள் உபயோகிக்கும் ஒரு முதுமொழி. சகல நாட்டு பிற்போக்குவாதிகளும் இத்தகைய முட்டாள்களே. புரட்சிகர மக்களுக்கு எதிரான அவர்களின் அடக்குமுறைகள் அனைத்தும், இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், மக்களின் புரட்சிகளை மேலும் விசாலமான, மேலும் தீவிரமான அளவில் வளர்ப்பதற்கு மாத்திரமே துணை செய்யும்.

# முக்கூட்டணி அரசாங்கத்தின் மூன்று மாத காலச் சாதனை

**பொதுத் தேர்தலில் ஏராளமான வாக்குறுதிகளை அள்ளிவீசி மக்களை மயக்கிய முக்கூட்டணியினரின் "மக்கள் அரசாங்கம்" வந்து மூன்று மாதங்களுக்கும் மேலாகிவிட்டன. இந்த மூன்று மாதங்களிலும் முக்கூட்டணி அரசாங்கம் செய்த வேலைகளை-சாதனைகளை மதிப்பீடு செய்யும்போது, தேர்தல் வாக்குறுதிகளை நம்பி அவற்றை நிறைவேற்றக் கோரிய மக்களை-தங்களைப் பதவியில் அமர்த்திய மக்களை அடக்கி ஒடுக்குவதில்தான் பல சாதனைகளைப் புரிந்துள்ளதே தவிர, உருப்படியாக வேறு எதனையும் சாதிக்கவில்லை என்பதைக் காணலாம்.**

முக்கூட்டணியின் அரசாங்கம் பதவிப் பிரமாணம் செய்த மறு நிமிடமே, பொலிஸ்படை தேர்தலுக்கு முன்னும், தேர்தலின்போதும் மக்கள் விரோதப் பிரச்சாரத்தை ராட்சஸத்தனமாகக் கட்டவிழ்த்துவிட்ட லேக் ஹவுஸுக்கு எதிராக ஆக்ரோஷத்துடன் எழுச்சியுற்று லேக் ஹவுஸ் பத்திரிகைக் காரியாலயத்தைச் சுற்றித் திரண்டிருந்த மக்களை கண்ணீர்ப் புகைக் குண்டுகளாலும், குண்டாந்தடிகளாலும் கோரமாகத் தாக்கி மண்டைகளைப் பிளந்து, எலும்புகளை நொறுக்கி, இரத்தம் சிந்தச் செய்து புதிய ஆட்சியை புதிய அடக்குமுறை அத்தியாயத்துடன் தொடங்கி வைத்தது. அதனை அடுத்து, அரசாங்கக் காணிகளிலும் நிலப்பிரபுக்களின் காணிகளிலும் குடியேறிய நிலமற்ற விவசாயிகளை ஈவிரக்கமின்றித் தாக்க பொலிஸ்படையை ஏவி மிருகத்தனமாக அந்நிலங்களிலிருந்து வெளியேற்றியது. தொடர்ந்து, புஞ்சி பொரளையில் சோமபாலாவின் உயிரைப் பலியெடுத்து தனது ரத்த வெறியைப் பிரகடனப் படுத்திய முக்கூட்டணி அரசாங்கத்தின் பொலிஸ்படை மூன்றுவது மாதத்தில் கினுகலையில் இரு தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்று பொலிஸ் ராஜ்யத்தை— ஹிட்லரிஸ, பாசிஸ தர்பாரை அறிமுகப் படுத்தியுள்ளது.

முக்கூட்டணியின் மூன்று மாதகால ஆட்சி மூன்று உயிர்களைப் பலியெடுத்துவிட்டது. அவர் தம் குடும்பங்களை அனுதரவாக்கி விட்டது. பலரைப் படுகாயப்படுத்தி அசக்தர்களாக்கி விட்டது.

வெறுப்புக்குரிய, கேடுகெட்ட யு. என். பி. ஆட்சியைப் போலவே இந்த முக்கூட்டணி ஆட்சியும் அரசாங்க ஊழியர்களையும், கூட்டுத்தாபன ஊழியர்களையும் ஆசிரியர்—ஆசிரியைகளையும் ஆயிரக்கணக்கில் அரசியல் பழிவாங்கியது; அவர்களை அவர்களின் குடும்பங்களிலிருந்து பிரித்து தூரப் பிரதேசங்களுக்குத் துரத்தியது; வேலையை விட்டு நீக்கியது; கட்டாய லீவில் போகுமாறு செய்தது. 55 வயதுக்கு மேற்பட்டோர் அரசாங்க சேவையிலிருந்து பென்ஷன் பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைத் திணித்தது.

தொழிலாளர்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதெல்லாம், தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகள் பக்கம் சார்ந்து அவர்களுக்குத் துணை செய்ய—சுரண்டலைப் பாதுகாக்க முக்கூட்டணி ஆட்சி பொலிஸ் படையை ஏவிவிட்டது. வெலோனு தொழிலாளர்களை குண்டாந்தடி கொண்டு தாக்கி பிரபல யு. என். பி. பிரமுகரும், வெலோனு முதலாளியுமான ரஸ்கின் பெர்னாண்டோவைப் பாதுகாத்தது. அக்மி அலுமினியம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது, வெள்ளை முதலாளிகளின் நலன்காக்க ஓடோடியும் வந்தது இந்த ஆட்சி. போனர்ஸ் கம்பெனி தொழிலாளர்களை வெளியேற்றிவிட்டு கதவடைப்புச் செய்ய முதலாளிகளுக்குத் துணையாக பொலிஸை அனுப்பி உதவியது. கினுகலையில் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளைப் பாதுகாக்க இரு தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்று அட்டூழியம் புரியவும், துப்பாக்கி முனையில் மிரட்டி அடக்கவும் பொலிஸை அனுமதித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க,

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாக தேர்தலின் போது சத்தியம் செய்த இம்முக்கூட்டணியினர், பதவிக்கு வந்து மூன்று மாதகாலமாகியும் வாழ்க்கைச் செலவை இன்னும் நடைமுறையில் குறைக்கவில்லை. அதேசமயம் எம். பி. மார்களுக்கு மேலும் ஐம்பது ரூபாய் அலவன்ஸைக் கூட்டிக் கொடுத்துள்ளது. அதேசமயம், திரைசேரி காலியாகிவிட்டது என்று சொல்லி ஏழைத் தொழிலாளர்களின் ஒரு நாட் சம்பளத்தைக் கறக்கிறது.

அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் தோட்டங்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்பதுவும், லேக்ஹவுஸை கையேற்க வேண்டும் என்பதுவும் இந்நாட்டு மக்களின் கோரிக்கையாகும். ஆனால், தோட்டங்களைத் தேசியமயமாக்கமாட்டோம் என்று அரசாங்கத்தின் கொள்கையை நிதியமைச்சர் அறிவித்துவிட்டார். லேக் ஹவுஸைப் பற்றியும் பேச்சு மூச்சில்லை.

அமெரிக்க ஏகாதிபத்திய நிறுவனமான உலக வங்கியிடமும் இதர நிதி ஸ்தாபனங்களிடமும் உதவி பெறுவது நாட்டு நலனுக்கு விரோதமானது. ஆனால் இந்த அரசாங்கம் திருவோட்டை ஏந்திக்கொண்டு அவைகளிடம் ஓடுகிறது.

கர்ப்பிணி குழந்தையைப் பெற பத்து மாதங்கள் தேவை. ஆனால், மூன்றுமாதங்களிலேயே அவள் கர்ப்பிணியா இல்லையா என்பது தெரிந்து போகும். அதுபோல, கடந்த மூன்று மாத காலத்தில் இந்த அரசாங்கத்தின் அடக்குமுறையும், தொழிலாளி வர்க்க, வெகுஜன விரோத நடவடிக்கைகளும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஆதரவான போக்கும், இந்நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதும், இந்த முக்கூட்டணி அரசாங்கத்தின் வர்க்க குணம்சம் என்ன? அது எங்கே போகிறது என்பதை முன் அறிவிப்புச் செய்துவிட்டன.

## அடையாள வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் அறைகூவலை ஏற்று செப்டம்பர் 13ந் திகதி இருபத்தையாயிரந்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் அரைநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள். ஊர்வலமும், பொதுக் கூட்டமும் சிறப்பாக நடைபெற்றன.

முழு விபரமும அடுத்த வாரம் ''தொழிலாளி'' யில் பிரசுரமாகும்.

## மலையகத்தில் 1 லட்சம் பேர் அடையாள வேலைநிறுத்தம்

மேபீல்ட், மடக்கொம்பரை போராட்டங்களைத் தொடர்ந்து பதுளை கினுகலை தோட்ட மக்களின் போராட்டம் வீர உணர்வுடன் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. இந்த போராட்டத்தில் உயிரிழந்த தியாகிகளுக்கு அஞ்சலி செய்து, போராட்டத்தை ஆதரித்து, பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தையும், அட்டகாசத்தையும் அடக்குமுறையையும் எதிர்த்து அடையாள வேலைநிறுத்தம் செய்து, எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டுமென செங்கொடிச் சங்கம் மலையக மக்களுக்கு அறைகூவல் விட்டது.

இந்த அறைகூவலை உணர்வுபூர்வமாக ஏற்று இம்மாதம் 9ம் திகதி மலைநாடெங்கும் அநேகமாக ஒரு இலட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

தொண்டமான்— அசீஸ் காங்கிரசுகளைச் சேர்ந்த தொழிலாளர் அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளக் கூடாதென பிற்போக்கு காங்கிரசுகள் அறிக்கைவிட்டன. ஆனால் பல பகுதிகளில், பல தோட்டங்களில் வீரமிக்கத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையின் துரோகத்தனமான வேண்டுகோளை நிராகரித்து, செங்கொடிச் சங்கத்தின் அறைகூவலை ஏற்று, செங்கொடிச் சங்கத் தொழிலாளரோடு அடையாள வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இந்தச் சம்பவம், மலைநாட்டில் தொழிலாள வர்க்க உணர்வும், ஒற்றுமையும் வளர்வதோடு செங்கொடிச் சங்கத்தின் சரியான பாதை தொழிலாளரை ஆகர்ஷிக்கின்றது என்ற உண்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

'மக்கள் அரசாங்கம்' என தம்மை பீத்திக்கொள்ளும் முக்கூட்டு முன்னணியினரின் 'போலி சோஷலிஸம்' சாதாரண மக்கள் மத்தியில் நன்கு அம்பலமாகி வருகின்றது.

7-ம் பக்கம் பார்க்க

நம்மைச் சுற்றி → நவம்

# சமசமாஜ நாடகத்தின் இறுதிக் காட்சிகள்

### 2வது கொத்து: எதிர்பார்த்ததும் நடந்ததும்

### வாயில் சோஷலிஸம்; தொழிலாளருக்கு எதிராக துப்பாக்கி!

இலங்கையைச் சுரண்டிச் சூறையாடும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களது உடைமைகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கு குடைபிடிக்கும் பத்திரிகை நிறுவனங்களுக்கும் — குறிப்பாக லேக்ஹவுஸுக்கும் அபயம் அளிப்பதற்கு லங்கா சமசமாஜக்கட்சி வரிந்து கட்டிக்கொண்டு முன் வந்திருக்கிறது. இதுநாள்வரை லங்கா சமசமாஜக் கட்சி மறைமுகமாக நடத்திவந்த நாடகத்தின் இறுதிக் காட்சிகள் பகிரங்கமாக மேடையேற்றப்படுகின்றன.

ஏகாதிபத்தியக் கொள்ளையர்களின் பிடியிலுள்ள தோட்டங்களையும், வர்த்தக, தரகு ஏஜென்ஸி நிறுவனங்களையும், வங்கிகளையும், லேக்ஹவுஸ் பத்திரிகைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்; தேசியமயமாக்க வேண்டும் என கூறுபவர்கள் தேசத்துரோகிகள் என்ற அர்த்தத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் சிங்களத் தினசரி எழுதுகிறது. சமசமாஜத் தலைவர்களும் துளியும் கூச்சமின்றி முன்பு தாம் ஆணித்தரமாகக் கூறியவற்றையெல்லாம் காரிய சாத்தியமற்றவை என அறிவிக்கின்றனர்.

டட்லி சேனநாயக்காவும், ஜே. ஆர். ஜெயவர்தனவும் பதவியிலிருந்தபோது செய்தவற்றையே இப்போது பதவியில் ஒட்டிக்கொண்ட இவர்களும் செய்ய முன் வந்திருக்கிறார்கள். தாம் அணிந்திருந்த முகமூடிகளையெல்லாம் கழற்றி வீசிக்கொண்டிருக்கிறார்கள். ட்ரொட்ஸ்கியவாதத்தின் உண்மையான சொரூபம் துரிதமாக வெளிப்படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியின் ட்ரொட்ஸ்கிய தத்துவ மூளை எனக் கூறிக்கொள்ளும் - கூடு விட்டுக் கூடுபாயும் காராளசிங்கம் இப்போது புதிய கருத்துக்களை முன்வைப்பவர் போல் எழுதியும் பேசியும் வருகிறார் - மக்களை ஏமாற்றுவதற்காக.

இந் நாட்டின் பொருளாதாரத்தை தமது இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்கும் உடைமைகளுக்கும் பாதகமாக எதையும் செய்ய சமசமாஜக் கட்சி விரும்பவில்லை என்பதை வேறு வார்த்தைகளில் கூறுகிறார் அவர்.

அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சொந்தமான தோட்டங்களையும், வர்த்தக, தரகு ஏஜென்ஸிகளையும், வங்கிகளையும் ஏகாதிபத்தியத்துக்கு அடிவருடும் லேக்ஹவுஸையும் அரசாங்கம் கையேற்க வேண்டும் என்ற கோரிக்கை காலத்திற்கேற்றதல்லவாம். முக்கூட்டணியின் கடமை பொது ''வேலைத் திட்டத்தை'' நிறை நிறைவேற்றுவது தானும் — கூறுகிறார் காராளசிங்கம்.

முக்கூட்டணியின் தேர்தல் ''பொது வேலைத்திட்டத்''தில் தோட்டங்களைத் தேசியமயமாக்குவது பற்றிக் கூறவில்லை என்பது உண்மை தான். ஆனால், நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்போம் என கூறுகிறது ''பொது வேலைத்திட்டம்.'' நாட்டை இன்றுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ உடமைகளின் மேல் ஈவிரக்கமில்லாமல் கை வைக்க வேண்டும் என்பதை ஆரம்ப மார்க்சிஸ அறிவுள்ளவர்கள் கூட அறிவர். ஆனால் அந்நிய ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெருமுதலாளித்துவ உடமைகளின்மேல் கை வைக்கக் கூடாது என்று கூறும் சமசமாஜ காராளசிங்கம் நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கவழி சொல்லவில்லை; அவரால் சொல்ல முடியாது தான். ஏனென்றால் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் உள்ள - மெக்னமாராவின் தலைமையில் உள்ள - உலக வங்கியிடமும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடமும் கடன் வாங்க சமசமாஜக் கட்சி தலைவர்கள் பல்லிளிக்கிறார்கள் அல்லவா? ''தங்கமூளை'' இமிடேஷனாகிறதல்லவா? அந்நிய ஏகாதிபத்திய நலன்களின் மேல் விரல்பட்டாலும் கூட அமெரிக்காவின் உலக வங்கி கடன், நிதி வசதி செய்ய மறுத்துவிடும் என்பது காராளசிங்கத்துக்குத் தெரியும். அதனால் தமது கட்சியின் கையிலுள்ள நிதி அமைச்சையும், தோட்டத் தொழில் அமைச்சையும் அந்நிய ஏகாதிபத்திய நலன்களுக்குச் சாதகமாக ஊழியம் செய்யப் பயன்படுத்துகிறார்கள்.

முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் சொத்துடைமையாளர்களின் ஜனநாயகம்; ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரு முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்கும் ஜனநாயகம் என்பதை சமசமாஜ கட்சியின் போக்கு மக்களுக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றது.

யு. என். பி.பச்சை சட்டை அணிந்து கொண்டு செய்த அதே வேலையை — ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துத்துக்குச் சேவை செய்யும் அதே வேலையை — சமசமாஜக் கட்சி சிகப்புச் சட்டையை அணிந்து கொண்டு செய்கிறது. இதை பகிரங்கமாகக் கூறுவதற்கு காராளசிங்கம் ஏன் தயங்க வேண்டும்?

★

அப்பாடா.....! இழுத்துக்கொண்டிருந்த இரண்டு கொத்து அரிசிபற்றிய இறுதி அறிவிப்பை அரசாங்கம் ஒருவகையாக வெளியிட்டு விட்டது. இரண்டாவது கொத்து அரிசியை 75 சதம் வைத்து இருகொத்து அரிசி கொடுக்கப்படும் என அது அறிவித்துள்ளது. எப்படியோ, இரு கொத்திலிருந்து தனது தலையைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில் இரண்டாவது கொத்தை 75 சதமாக்கிவிட்டது. இது மக்கள் எதிர்பார்க்காத ஒன்று.

முதல்கொத்து இலவசம் (இது இப்போதும் இலவசம் தானே) இரண்டாவது கொத்து 75 சதம் என்று மூன்று மாதங்களுக்குப் பின்னால் அறிவிக்கும் இவர்கள் பதவிக்காக தேர்தல் போராட்டத்தில் ஈடுபட்டபோது, முக்கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றால் மறுநாள் இரு கொத்து அரிசி கொடுக்கப்படும் என்றார்கள். அடுத்த நாளே முடியுமா என்ற கேள்வி எழுந்தவுடன் ஒரு மாதம் கழித்து என்றார்கள். இந்த இரு கொத்தும் இலவசமா? இரு கொத்துக்கும் விலை வைக்கப்படுமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்காமல் சமர்த்தாக மூடி மறைத்துவிட்டு இரு கொத்து அரிசி கொடுப்போம் என்பதை மட்டும் பிரமாதப்படுத்தி தேர்தலில் ஒட்டுப் பொறுக்கினார்கள். ஆனால், இந்தப் பிரசாரத்தை மக்கள் அர்த்தப்படுத்திக்கொண்ட விதம், 65க்கு முன்பு இருந்ததைப்போல இரண்டு கொத்து அரிசி ஐம்பது சதத்துக்கு கிடைக்கும் அல்லது ஒரு கொத்து இலவசமாகவும் இரண்டாவது கொத்து குறைந்த விலையிலும் கிடைக்கும் என்றுதான். அதனால்தான் முக் கூட்டணியினருக்கு ஓட்டுக் கொடுக்க இதனையும் ஒரு முக்கிய காரணமாகக் கொண்டார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களின் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது.

★

ஒரு வெள்ளையனுக்காக இரு தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்று கிளுகலையில் அட்டூழியம் புரிகிறது முக்கூட்டணியின் பொலிஸ்படை. நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்ததைப் போன்று கிளுகலையில் தான் தோன்றித்தனமாய் பொலிஸ் படை நடந்துகொள்வதைப் பார்த்தால், இலங்கை பொலிஸ் படையின் அதிகாரி யார்? வெள்ளையன் சமர்விலா என்ற சந்தேகம் எழுகிறது.

தூக்கிலிடப்பட்டவர்களின் பிரேதங்களைக்கூட உறவினர்கள் விரும்பினால் ஒப்படைத்து அவரவர் ஆசாரப்படி அனுமதிக்கப்படும்போது, தமது நியாயமான கோரிக்கைகளுக்காக நிராயுதபாணிகளாகப் போராடிய தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்றது மட்டுமல்லாமல், சடலங்களையும் உறவினர்களிடம் ஒப்படைக்காமல் அனாதைப் பிணங்களாக அத் தொழிலாளர்களின் சடலங்களை அடக்கஞ் செய்யும் நீசத்தனத்தைச் செய்ய பொலிஸ் படைக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த விதமான ஹிட்லர் தர்பாரை நடத்த தனது பொலிஸை அனுமதிக்கவா முக்கூட்டணி பதவிக்கு வந்தது?

பாராளுமன்றத்தினுள் ஆட்சி கைமாறிய போதிலும் முதலாளித்துவ அடக்குமுறை இயந்திரம் எதுவித தடையுமில்லாமல் மிருகத்தனமான அடக்குமுறையை தொழிலாளர்கள்மீதும் உழைக்கும் வெகுஜனங்கள்மீதும் பிரயோகிப்பது மாறவில்லை என்பதை இது மேலும் அம்பலப்படுத்துகிறது.

முக்கூட்டணி பதவி ஏற்ற போதே புஞ்சிபொரளையில் சோமபாலா அடித்துக் கொல்லப்பட்டார். அதற்கு ஒரு ஏதோ விசாரணையும் நடத்தப்பட்டு பொலிஸின் நடவடிக்கை சரி என நற்சாட்சிப் பத்திரமும் கொடுக்கப்பட்டது.

தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றியும், முதலாளித்துவ அடக்குமுறை பற்றியும் ஆயிரக்கணக்கான மேடைகளில் நீலிக் கண்ணீர் வடித்த முக்கூட்டணியினர்—1966, ஜனவரி 8ந் திகதி வகுப்புவாத வேலைநிறுத்தத்தில் யு. என். பி. பொலிஸால் சுடப்பட்டு இறந்த பௌத்த பிக்குவின் பிரேதத்தை தேர்தல் பிரச்சார மேடைகளுக்குப் பயன்படுத்தி பொலிஸையும், யு. என். பி. யையும் ஆவேசமாகக் கண்டித்தவர்கள்-தாம் பதவியில் அமர்ந்ததும், அமைச்சர்களானதும் 1966 ஜனவரி 8ந் திகதி சுடுவதற்கு உத்தரவிட்ட—வேலையிழந்திருந்த பொலிஸ் அதிகாரியை மீண்டும் பொலிஸ் படையில் உயர் பதவியில் அமர்த்தினார்கள். பொலிஸ் படையை தொழிலாளர்கள் மீதும், உழைக்கும் மக்கள் மீதும் ஏவிவிடுகிறார்கள். ஏகாதிபத்தியவாதிகளையும், நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவவாதிகளையும் பாதுகாக்க யு. என். பி.யையும்விட நாம் திறமையாக நடவடிக்கை எடுப்போம்; தொழிலாளர்களையும், உழைக்கும் மக்களையும் அடக்குவோம் என்பதை நிரூபிக்கிறார்கள்.

முதலாளித்துவ அடக்குமுறையாளர்கள் சரித்திரத்தில் என்றுமே வெற்றி பெற்றதில்லை. உழைக்கும் வெகுஜனங்களைக் கண்டு பயப்படுகிறவர்கள்தான் அடக்குமுறையை உபயோகிக்கின்றனர். அடக்குமுறையைப் பிரயோகிப்பவர்கள் தமது கழுத்துக்கு தாமே சுருக்குக் கயிற்றைப் போட்டுக்கொள்கிறார்கள் என்ற உண்மையை முக்கூட்டணி அரசாங்கத்தில் வீற்றிருப்பவர்களுக்கு கூறிவைக்கிறோம்.

வாயில் சோஷலிஸத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு கையில் துப்பாக்கியுடன் உழைக்கும் வெகுஜனங்களின் உயிரைப் பழிவாங்கும் முக்கூட்டணி அரசாங்கத்தின் போலிப் பிரச்சாரத்தில் மயங்கியவர்களை கிளுகலை சம்பவங்கள் தெளியவைக்கட்டும்.

## இந்தியாவின் அந்நியக் கடன் ரூ. 5000 கோடிக்கு மேல்

**1967** மார்ச்சில் வெளிநாடுகளுக்கு இந்தியா தரவேண்டிய கடன் ரூ. 4800 கோடிக்கு உயர்ந்துள்ள இந்திய ரிசர்வ் வங்கிப் பிரசுரம் கூறுகிறது.

அன்று நாட்டின் மொத்த அந்நியக்கடன் ரூ. 5587 கோடி. அதில் ஐந்தில் நான்கு பங்கு அரசுத்துறையைச் சேர்ந்தது. மீதி அரசு உடமையான தொழில் நிறுவனங்கள், வங்கிகள் உட்பட அதிகாரப் பற்றில்லாத துறையைச் சேர்ந்தது.

அரசு துறையின் கடனில் பாதிக்குமேல், அமெரிக்காவுக்கு தரவேண்டியதாகும். அது ரூ. 2305 கோடி. (55 சதவிகிதம்) பிரிட்டனுக்கு 333 கோடி (8 சதவிகிதம்) ரஷ்யாவுக்கு ரூ 274 கோடி (7 சதவிகிதம்) மேற்கு ஜெர்மனி ரூ. 241 கோடி (6 சதவிகிதம்) ஜப்பான் 113 கோடி (3 சதவிகிதம்)

1967 மார்ச் முடிவில் அயல் நாடுகளில் உள்ள இந்திய சொத்துக்களின் மதிப்பு ரூ. 594 கோடி.

இப்போது இந்த மூன்று ஆண்டுகளுக்குள் அந்நியக் கடன் மேலும் பலநூறு கோடி ரூபாய்கள் அதிகரித்துள்ளது. இதிலிருந்து இந்திய அரசாங்கம் எந்தளவு பங்கலோட்டாகி இருக்கிறது என்பதுவும், குறிப்பாக இந்திய பிற்போக்கு அரசாங்கம் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்களுக்கு இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடகு வைத்திருக்கிறது என்பதுவும் புலனாகும்.

# இந்திய பத்திரிகைகளை தடை செய்யும் பிரச்சினை:
# இதன் பின்னணியும் நோக்கமும் என்ன?

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ப்பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் ''தடை'' செய்ய வேண்டும் என்ற ஒரு பல்லவி கடந்த சில வாரங்களாக இந்நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகளில் பல்வேறு குரல்களில் பாடப்பெற்று வருவது குறித்து ஏற்கனவே நாம் தொழிலாளியில் குறிப்பிட்டிருக்கிறோம். முக் கூட்டணி முக்கியஸ்தர்கள் சிலர் இது விஷயமாகக் குரல் எழுப்ப, அது தமிழ் விவகாரமாக மாறி முடக்குவாதத்தால் முடங்கிக்கொண்டு மூலையில் கிடந்த சமஷ்டிக்கட்சி மேடைப் பிரசங்கிகளுக்கு வரப்பிரசாதமாக உருப்பெற்றுள்ளது.

## இலாப நோக்கு

இந்தக் குரல் எந்த விதத்திலும் புதியதொன்றல்ல. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னரும் இக் குரல் ஒலித்தது. ஆனால் அப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பும் அதிகமாக இருந்ததாக முதலாளித்துவப் பத்திரிகைகள் எடுத்துக்காட்டின. இன்று அதே முதலாளித்துவப் பத்திரிகைகள் இந்தியப் பத்திரிகைகள் தடைசெய்யப்படுவதில் கூடிய ஆர்வம் காட்டுகின்றன. சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். அதுபோல, முதலாளித்துவ நிறுவனங்கள் ஒரு விஷயத்தை ஆதரிக்கின்றன என்றால், அதில் இலாப நோக்கு இருக்கிறது என்பதை உடனேயே கூறிவிடலாம். 1956க்குப் பின் இக் குரல் எழுந்தபோது இருந்ததைவிட இன்று இந்நாட்டில் தமிழ்ப் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அவற்றின் வர்த்தகத்தன்மையும் இலாபநோக்கும், அவற்றுக்கே உரிய போட்டிகளும் அதிகரித்துள்ளன. இதனால் மனிதனின் மிருக உணர்ச்சிகளை மேலும் மேலும் தட்டியெழுப்பும் விதத்தில் பத்திரிகைகள் நடாத்தப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் எமது நாட்டுப் பத்திரிகைகள் தமது வர்த்தகத்தன்மையில் முதிர்ச்சியடைந்துள்ளன. சர்வதேச முதலாளித்துவ ''பத்திரிகா தர்மங்கள்'' அத்தனையும் கைக்கொள்ளப் படுகின்றன. ஏகாதிபத்திய அமைப்பில் காலனிகளுக்காகவும் சந்தைகளுக்காகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் எவ்வாறு நாய்ச் சண்டையில் ஈடுபடுகின்றனவோ, ஒன்றையொன்று கழுத்தறுத்துப் போரிடுகின்றனவோ, ஈவிரக்கமற்ற சுரண்டலிலும் கொள்ளையிலும் ஈடுபடுகின்றனவோ அதைப்போலவே சுதந்திரப் பத்திரிகைகள் என்ற பெயரில் மிருகத்தனமான தசை வேட்டையில் வெவ்வேறு பத்திரிகைகள் ஈடுபடுகின்றன.

## வேடிக்கையான் கூற்று

இந்தப் பின்னணியை நாம் மனதில் வைத்துக்கொண்டால் இந்நாட்டு முதலாளித்துவம் பத்திரிகை ஸ்தாபனங்கள் இந்திய (தமிழ்) சஞ்சிகைகளுக்குத் தடை அல்லது கட்டுப்பாடு விதிப்பதற்கு முழுமூச்சாக நிற்பதன் உள்ளாந்தரம் ஓரளவு தெளிவாகிவிடும். அதேசமயத்தில் இந்தியாவிலிருந்து வரும் ''குப்பைகள்'' என்று பிற நாட்டுச் சஞ்சிகைகள் வருணிக்கப்படும்பொழுது இந்நாட்டுக் குரியவை தரத்தில் உயர்ந்தவை என்ற தப்பபிப்பிராயமும் மயக்கமும் உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாது தேசியமயம் என்ற போர்வையில் உள்ளூர்க் குப்பைகளுக்கெல்லாம் கௌரவமான சந்தை ஏற்படுத்தவும் வாய்ப்புக் கிடைத்து விடுகிறது.

பத்திரிகைகளின் நோக்கு இவ்வாறு இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அது எதிர்ப்பார்க்கக் கூடியதுமா

# தர வேறுபாடு காணும் முட்டாள்தனம்

கும். ஆனால் கலை இலக்கியத் துறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் என்றவகையில் இக் குரலை எழுப்பிக் கொண்டிருக்கும் அரசாங்க ஆதரவாளரும திசைதவறிய வேறு சிலரும் இவ்விஷயம்பற்றிக் கூறுவன வேடிக்கையாவும் பரிதாபகரமாவும் இருக்கின்றன.

சோஷலிஸ்டுகள் என்றும். முற்போக்காளர் என்றும் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் இவர்களும் இந்தியப் பத்திரிகைகள் இந்நாட்டில் வந்து எமது இலக்கியத்தைப் பாதிக்கலாகாது என்கின்றனர்; அதேவேளையில் சிற்சில இந்தியப் பத்திரிகைகள் தரமானவை — இலக்கியத்துறையைச் சேர்ந்தவை - என்ற காரணத்தால் தடையின்றி வர வேண்டும் என்றும் கூறிக் கொள்கின்றனர். இதிலேதான் போலிச் சோஷலிஸ்டுகளின் பலவீனமும் பிறழ்வும் துலக்கமாகத் தெரிகிறது. அவர்களது அரசியல் ஞானசூனியமும் துலாம்பரமாகிறது.

## வரட்டுக் கூக்குரல்

முதலாவது வாதத்தை எடுத்துக் கொள்வோம். இந்நாட்டுக் கலை இலக்கியத்தை இந்தியப் பத்திரிகைகள் பாதிக்கின்றன என்ற கூற்று மேல் நோக்கான வரட்டுக் கூக்குரலாகும். இந் நாட்டில் இன்று செல்வாக்குள்ள கலை இலக்கியத்தில் பெரும்பகுதி எத்தகையது? யாரால் யாருக்காகப் படைக்கப்படுகின்றன? இதற்கு விடை கூறுவது கடினமல்ல. ஒரு நாட்டிலே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எந்த வர்க்கம் அதிகார பீடத்தில் உள்ளதோ அந்த வர்க்கமே தனது நலன்களுக்கு ஏற்ற வகையில் கலை, இலக்கியம், கலாச்சாரம் முதலியவற்றைப் படைத்துப் பிரச்சாரஞ் செய்கிறது.

இது வரலாற்றியல் நியதி, சமுதாய உண்மை. இன்று இந்நாட்டு அதிகாரம் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, ஏகாதிபத்திய சார்பான வர்க்கக் கண்ணோட்டமுடையவர்கள் கையிலேயே இருக்கிறது. அரசியல் பதவியில் யார் இருந்தாலும் அரசு இயந்திரம் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வர்க்கத்தின் கையிலேயே இருக்கிறது. உலக வங்கியின் உதவியை நாடும் பணிவுடனேயே நிதி மந்திரி பேசுகிறார்.

இந்நிலையில் இந்நாட்டுக் கலாச்சாரம் எத்தகையதாயிருக்கும்? இங்கு உள்ளது இந்தியாவில் உள்ளது போன்ற கலாச்சாரம்தான். இரு நாடுகளிலும் புரட்சிகர முற்போக்கு இயக்கம் தகுந்த வெளியீட்டுச் சாதானங்களின்றி, ஏகபோக உரிமையாளரால் நாலா பக்கமும் தாக்கப்பட்டு வருகிறது. உள்ளூர்ப் பத்திரிகைகள் அனைத்தும் (கூட்டணி ஏடுகள் உட்பட) மார்க்சிஸ்டு - லெனினிஸ்டுகளையும், தலைமையையும் தாக்குகின்றன. இந்தியாவிலும் அப்படியே. ஆகவே முதலாளித்துவ அமைப்புக்குள் வெளிவரும் ஏடுகள் இலங்கையில் என்றால் என்ன, இந்தியாவில் என்றால் என்ன ஒத்த தன்மையானவையே. குப்பை குப்பையை மாசுபடுத்த இயலாது; குப்பையைப் பெருக்கக் கூடும் அவ்வளவுதான். வர்க்க அடிப்படையில் இவையாவும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரானவை; எதிர்ப்புரட்சிக்கு உதவுபவை; உலக ஏகாதிபத்தியத்துக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சேவை செய்பவை. இவற்றுக்குள் ''தரம்'' பேசுவது முட்டாள்தனமான வேலையாகும்.

## மணிவாசகம்

இனி, இரண்டாவது வாதத்துக்கு வருவோம்: இந்திய சஞ்சிகைகள் பற்றி ஆராய்ந்து ''அறிக்கை'' சமர்ப்பித்திருப்பவர்கள் கல்கி, விகடன், கலைமகள், குமுதம், தினமணிகதிர் போன்ற பத்துப்பனிரண்டு ஏடுகள் தரமான இலக்கியச் சார்பான ஏடுகள் என்று எடுத்துரைத்துள்ளனர். இது அடிமுட்டாள்தனமான பேச்சாகும். இக் கூற்று ஒன்றே இவர்களின் தன்மையை முற்றாகக் காட்டுவதாயுள்ளது.

சில வருடங்களுக்குமுன் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் நெருக்கடி ஏற்பட்டது. திரிபுவாதக் கோமாளி குருஷ்சோவ் காலத்தில் இச்சம்பவம் நடந்தது. கியூபா மக்களது அபிப்பிராயத்தைத் துச்சமெனக் கருதி ஏவுகணைகளை ரஷ்ய சமூக ஏகாதிபத்தியவாதிகள் அந்நாட்டில் நிர்மாணித்தனர்; அதனை அறிந்த அமெரிக்கர் உரத்துச் சத்தம்போட்டு போர்முரசு கொட்டியதும் அவசரம் அவசரமாக அந்த ஏவாயுதங்களை மீண்டும் கியூபா மக்களை கலந்தாலோசிக்காது அகற்றிச் சென்றனர். இது பற்றிச் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் மணியான வாசகம் ஒன்று கூறினர்: முதலிலே எண்ணித் துணியாது அந்த ஏவாயுதங்களை கியூபாவில் வைத்தது வரட்டு வீரவாதம்; எதிரியின் மிரட்டலைக் கண்டு அவற்றை அகற்றியது அசல் சரணாகதிவாதமாகும் என்று அற்புதமாக விளக்கினார்கள் அவர்கள்.

அதுபோலவே, எந்த விதமான ஆழ்ந்த ஆராய்ச்சியோ, நோக்கோ, மக்கள் இயக்கமோ இன்றி அவசர குடுக்கைகளாக ''இந்தியப் பத்திரிகைகள் சஞ்சிகைசள் அனைத்தும் தடைசெய்யப்பட வேண்டும்'' என்று வீறாப்புப் பேசியது வரட்டு வீரவாதமாகும்; பின்னர் ஆங்காங்கு எழுந்த எதிர்ப்புகளைக் கண்டு அவற்றுக்குச் சமாதானம் கூறுவதுபோல் ''இன்ன இன்ன சஞ்சிகைகள் இலக்கியத்தரமானவை, ஆகவே இறக்குமதி செய்யப்படலாம்'' என்றது பரிபூரணமான சரணாகதியாகும். ஏனெனில், இரண்டாவது கூற்று அடிப்படையையே விட்டுக் கொடுத்தாகும்.

## விகடன், கலைமகள், குமுதம்

இவர்கள் ''தரமானவை'' என்று விட்டுக்கொடுக்கும் ஆனந்த விகடன், குமுதம், கல்கி, தினமணிக்கதிர் போன்றவற்றின் தரம் எத்தகையது? இக் கேள்வி முக்கியமானது. முதலாவது இவற்றைத் ''தரம்'' என்று உள்ளூர்ப் போலிச் சோஷலிஸ்டுகள் நற்சான்றிதழ் வழங்குவதால் அவற்றுக்கு மேலும் மதிப்பு ஏற்படுகிறதல்லவா? ஆனால், உண்மையில் அவை முதலாளித்துவ அரசியலுக்கு அப்பாற்பட்டவையா? விகடன் இன்று அப்பழுக்கற்ற சிண்டிகேட் (பழைய காங்கிரஸ்) ஏடு, கல்கி வெட்ட வெளிச்சமான சுதந்திரா ஏடு; குமுதம் அரசியல் பச்சோந்தி; தினமணிக்கதிர் பிற்போக்கு சுதந்திரா ஏடு; ''புகழ்பெற்ற'' கலைமகள் அரசியலில் சிண்டிகேட். அதே சமயத்தில் விகடன், அமெரிக்க தாசனான மணியத்தின் மேற்பார்வையில் பெண்களுக்கு விஷேசமாக அமைந்து, மேல்நாட்டுப் பாணிக் கதைகளை ஒளிவு மறைவின்றி வெளியிடுகின்றது. விகடனைப் படிக்காதவர் கூட இதில் வரும் ஆபாசச் சித்திரங்களைக் கவனிக்கலாம். தமிழ்நாட்டு இலக்கிய ஹிப்பிகளான ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி போன்றோரும், சமயபோதையூட்டும் பரணீதரன் போன்றோரும் இதில் சிற்றின்பப் போதையையும் நல்ல முறையில் ஊட்டி வருகிறனர். இவற்றில் என்ன இலக்கியம் இருக்கிறது?

## கல்கி

கல்கியை எடுத்துக் கொள்வோம். அது இலக்கியப் பத்திரிகையா? குடும்பப் பத்திரிகை என்ற பெயர் கூட இப்பொழுது இல்லை. முற்றுமுழுதாக சுரண்டும் வர்க்கத்தின் பாதுகாவலனான ராஜாஜியின் அரசியல்தான். புழுத்துநாறும் படுபிற்போக்கு நாற்றத்தை வீசிப் பரப்பும் ஏடு அது. தற்சமயம் இந்தியாவில் நடைபெறும் விவசாயிகள் புரட்சிகரப் போராட்டத்தை முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் — வக்கிரத்தனமான நச்சுப் பார்வையில் நோக்கி எழும் 'நாவல்' வெளிவருகிறது. புரட்சிகர தத்துவத்துக்கு எதிராகத் தள்ளாடி விழும் காந்தீயத்தைப் பிரச்சாரம் செய்கிறன இப்பத்திரிகைகள். சில பாசிஸத்தை மறைமுகமாகவும் தயக்கமின்றியும் ஆதரிக்கின்றன. இவற்றையெல்லாம் தரமான ''இலக்கியம்'' என்று உண்மையான முற்போக்குவாதிகள் கூறிட முடியுமா? அல்லது வர்க்கங்களைக் கடந்த இலக்கியம், கலை, சிந்தனை முதலியன உண்டா? இவற்றைத் தரமானவை என்போரின் தரத்தை என்னவென்று நாம் மதிப்பிடுவது?

## தீபம்

அல்லது இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். தீபம் ஓர் இலக்கியப் பத்திரிகை என்று இந்நாட்டு எழுத்தாளர் சிலர் கணிப்பதுண்டு. (அது சென்ற வருடம் தயாரித்த ஈழத்து மலருக்குப் பின் மதிப்பு இறங்கியிருப்பதாகத் தெரிகிறது) ஆனால், அது முழுக்க முழுக்க அரசியல் பத்திரிகையாகவே இன்று நடைபெறுகிறது. தமிழகப் பெரு முதலாளிகளின் நலன்களை எடுத்துரைப்பதாய், சுதந்திரா, சிண்டிகேட் சார்புடையதாய், கம்யூனிஸ்டு எதிர்ப்பை முழுமூச்சாகக் கொண்டதாய் காந்தீயம் என்ற போர்வையில் ஏகாதிபத்தியச் சார்புடையதாய் அது விளங்குகிறது. இந்நிலையில் தீபம் தரமான இலக்கியப் பத்திரிகை என்பவர் எத்தகையவராய் இருப்பார்? அவரது அரசியல் முற்போக்கானதாய் இருக்குமா?

இவற்றைத் தரமானவை என்று இறக்குமதி செய்ய விரும்புகிறவர்கள் தாம் எத்தகைய இலக்கியத்

7-ம் பக்கம் பார்க்க

# கட்சி பற்றிய தலைவர் மாஓவி

# மனப் பூர்வமாகப் படிப்பீர்!

**"பீக்கிங் ரிவியூ" என்ற ஆங்கில சஞ்சிகையில் வெளியான "கட்சிபற்றிய தலைவர் மாஓவின் தத்துவத்தை மனப்பூர்வமாக கற்பீர்" என்ற தலைப்பில் ஜென்-சுன் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம். -ஆர்**

சீனப்புரட்சிக்குத் தலைவர் மாஓவின் தலைமையில் அரை நூற்றுண்டு காலமாக நடைபெற்ற போராட்டங்களின் போது, கட்சி நிர்மாணத்திற்குத் தலைவர் மாஓ எப்பொழுதுமே அதி முக்கியத்துவம் அளித்துள்ளார். சீனப் புரட்சியின் வளர்ச்சியினூடாகவும், கட்சிக்குள்ளே இரு நெறிகளுக்கிடையே நடந்த போராட்டத்திலும், கட்சியை ஸ்திரப்படுத்துவதற்கும், கட்சி நிர்மாணத்திற்குமான இயக்கத்திலும், நவீன திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்திலும் கட்சி நிர்மாணம்பற்றிய மார்க்சிஸ - லெனினிஸத் தத்துவத்தைத் தலைவர் மாஓ ஆக்கபூர்வமாகவும், பல தரப்பட்ட விதத்திலும் அபிவிருத்தி செய்துள்ளார். கட்சி பற்றிய மாஓ அவர்களின் இத் தத்துவம், எமது கட்சியாலும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தாலும் திரட்டப்பட்ட கட்சி நிர்மாண அனுபவத்தின் தொகுப்பாகும். அத்துடன், மாசேதுங் சிந்தனையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகும். கட்சி நிர்மாணம் பற்றிய தலைவர் மாஓவின் தத்துவத்தைப் பயிலுவதற்கு எமது கட்சியில் நடைபெற்ற பெரும் அளவிலான இயக்கங்கள் யாவும் கட்சியின் வளர்ச்சிக்கும், சீனப் புரட்சியின் வெற்றிகரமான முன்னேற்றத்திற்கும் மகத்தான உற்சாகத்தை அளித்துள்ளன.

## மாஓ கட்சிக்குச் சரியான நெறியைக் காட்டினுர்

தலைவர் மாஓ சீன கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவிய பொழுது, அவர் சீனப் புரட்சியின் யதார்த்த நடைமுறைகளோடு மார்க்சிஸம் - லெனினிஸத்தைப் பிணைத்ததன் மூலம் எமது கட்சிக்கு சரியான அரசியல் நெறியைத் தீட்டியளித்தார். 1926ல், கட்சிக்குள்ளேயிருந்த "இடதுசாரி" வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக நடந்த போராட்டத்தின்போது தலைவர் மாஓ "சீன சமுதாயத்திலுள்ள வர்க்கங்களின் ஆராய்வு" என்ற தனது புகழ்மிக்க படைப்பை வெளியிட்டார். அதில் அவர் சுட்டிக்காட்டியுள்ளதாவது: "கைத் தொழில் பாட்டாளி வர்க்கமே எமது புரட்சியில் தலைமை சக்தியாகும்." இவ்வாறு, அவர் புரட்சிக்குத் தலைமையளிக்கையில், கட்சியின் முக்கியத்துவமுள்ள முதல் பிரச்சினையை, அதாவது யார் மீது தங்கிநிற்பது, யாருடன் ஐக்கியப்படுவது, யாரைத் தாக்குவது என்ற பிரச்சினையை தீர்த்து வைத்தார். 1928 "சிங்காங் மலைகளிலான போராட்டம்" என்ற தனது கட்டுரையில் கட்சி ஸ்தாபனம் பற்றிக் குறிப்பிடுகையில் தலைவர் மாஓ பின்வருமாறு வலியுறுத்திக் கூறினுர்: "பாட்டாளி வர்க்க சித்தாந்தத் தலைமை என்ற பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."

## உன்னதமான படைப்பு

1929ல் தலைவர் மாஓ கியூட்டியன் கூட்டத் தீர்மானத்தை, அதாவது. "கட்சிக்குள்ளேயுள்ள தவறுகளைத் திருத்துவது பற்றி" என்ற கட்டுரையை எழுதினுர். அதில் அவர் கட்சிக்குள்ளே சித்தாந்த கல்வியைப் பலப்படுத்துவதையும், சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதையும் கட்சியின் சரியான அரசியல் கொள்கையை நடைமுறறப்படுத்துவதற்குள்ள அடிப்படை உத்தரவாதமெனக் கருதினுர். அவர் சுட்டிக் காட்டியதாவது: "கட்சியின் சரியான நெறியைப் பிரயோகப்படுத்துவதற்குப் பெரும் தடையாக விளங்கும், பாட்டாளிவர்க்கத்திற்கு மாறுன பல்வேறு கருத்துக்கள், நான்காவது செஞ்சேனையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனத்தில் காணப்படுகின்றன, இக் கருத்துக்கள் பூரணமாகத் திருத்தப்படாவிட்டால் நான்காவதுசேனை சீனத்தின் மகத்தான புரட்சிப் போராட்டத்தில் தனக்குத் தரப்பட்டுள்ள பணிகளை சிறப்புறச் செய்ய முடியாது." தலைவர் மாஓ மார்க்சிஸ - லெனினிஸ வர்க்க ஆராய்வைப் பிரயோகித்து, கட்சிக்குள்ளேயுள்ள பாட்டாளிவர்க்கத்துக்கு மாறுபட்ட பல்வேறு கருத்துக்களின் வடிவங்களையும் அவற்றின் தோற்றுவாய்களையும் ஆழமாக விளக்கியதுடன், அவற்றைத் திருத்துவற்கான முறைகளையும் முன்வைத்தார். தலைவர் மாஓவின் இந்த உன்னத படைப்பு கட்சியினதும், சேனையினதும் நிர்மாணத்தில் எமக்குள்ள மகத்தான வேலைத் மதிட்டாகும்.

கியூட்டியன் கூட்ட அறிக்கையின் உன்னதமான சிந்தனை, கட்சியின் அரசியல் நெறி, உள்கட்சிப் போராட்டம், கட்சியின் சித்தாந்தக் கல்வி போன்ற கட்சி நிர்மாணத்தின் அடிப்படைப் பிரச்சினை கட்சிக்குள்ளும், வெளியேயுமுள்ள தோழர்களை நன்கு புரிந்து கொள்ளச் செய்துள்ளது. செஞ்சேனையிலும், வெகுஜன இயக்கத்திலும் கட்சியின் தலைமையைப் பலப்படுத்துவதிலும், புரட்சிகர தளப் பிரதேசங்களை வளர்த்தெடுப்பதிலும், ஸ்திரப்படுத்துவதிலும் முக்கிய பாத்திரத்தை வகிக்கவும் செய்துள்ளது. முழு கட்சியும், முழுச் சேனையும், நாடெங்குமுள்ள புரட்சிகர வெகுஜனங்களும் இந்த உன்னதமான படைப்பை இது நாள்வரை தொடர்ந்து கற்று வருகின்றனர்.

## பித்தர் கூட்டத்தின் எதிர்ப்பு

வாங்மிங் பிரதிநிதித்துவம் செய்த "இடதுசாரி" சந்தர்ப்பவாதக் கோஷ்டி 1931ல் கட்சி மத்திய கமிட்டியின் தலைமையை அபகரித்தது. இந்த பித்தர்கள் கூட்டத்திற்கு அணுவளவேனும் மார்க்சில - லெனினிஸ அறிவு இருக்கவில்லை; அல்லது சீனப்புரட்சியின் உண்மையான நிலைமைகள் என்னவென்று சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை; அவர்கள் தலைவர் மாஓவின் சரியான அரசியல், இராணுவ நெறிகளை எதிர்த்ததுடன் கியூட்டியன் கூட்டத் தீர்மானம் அமுல்படுத்தப்படுவதைச் சீர்குலைத்தனர். இதன்மூலம் கட்சிக்கும், செஞ்சேனைக்கும் பெருத்த நஷ்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. மகத்தான வரலாற்று முக்கியத்துவமிக்க சுன்யி கூட்டத்தில் முழு கட்சியிலும் தலைவர் மாஓவின் தலைமை ஸ்தாபிக்கப்பட்டது. வாங்மிங் "இடதுசாரி" சந்தர்ப்பவாத போக்குக்கு கட்சியில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அத்துடன்கட்சியின் நெறி சரியான மார்க்சிஸ - லெனினிஸப் பாதைக்குத் திரும்பவும் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு எமது கட்சி ஒன்றன்பின் ஒன்ருக வந்த இடையூறுகளைத் தாண்டுவதிலும், கோமிண்டாங்கிங் எதிர்ப்புரட்சிகர "சுற்றிவளைத்து நசுக்குதல்" நடவடிக்கைகளை முறியடிப்பதிலும், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் முன்னேற்றகரமான ஸ்தானங்களை வெற்றிகரமாக வந்தடைவதிலும், தலைவர் மாஓவினுல் முன்வைக்கப்பட்ட ஜப்பானிய-விரோத தேசிய ஐக்கிய முன்ணணி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தவும், செஞ்சேனைக்கு தலைமை அளிக்கவும் முடிந்தது.

## சரணுகதிவாதத்திற்கு எதிரான போராட்டம்

ஜப்பானிய - விரோத தேசிய ஐக்கிய முன்னணிக்காகப் போராடுகையில், தலைவர்மாஓ ஐக்கிய முன்னணிக்குள் கட்சியின் தந்திரமும், முன்னேட்டமும் என்ற கோட்பாட்டை உயர்த்திப் பிடித்தார். ஜப்பானுக்கு எதிரான எதிர்தாக்குதல் யுத்தம் வெடித்த பிறகு கட்சிக்குள்ளே பிரதான ஆபத்து "இடதுசாரி" தனிமை வாதத்திலிருந்து வலதுசாரி சரணுகதிவாதமாக மாறிவிட்டதுஎன்று அவர் சரியான சமயத்தில் சுட்டிக் காட்டினுர். "கட்சிக்குள்ளே வர்க்க சரணுகதிவாதத்தை எதிர்ப்பீர், நாட்டில் மொத்தத்தில் தேசிய சரணுகதிவாதத்தை எதிர்ப்பீர்" என்றஅறைகூவலைத் அவர்விடுதார். "எல்லாமே ஐக்கிய முன்னணி மூலம் செய்யப்படவேண்டும்", "எல்லாமே ஐக்கிய முன்னணிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்" (எல்லாவற்றையும் கோமின்டாங்மூலமாகச் செய்வதும் எல்லாவற்றையும் கோமிண்டாங்குக்குச் சமர்ப்பிப்பதும்தான் இதன் உண்மையான அர்த்தமாகும்.) என்ற வாங்மிங்கின் சரணுகதிவாதத்துக்கு எதிராகத் தலைவர் மாஓ விட்டுக்கொடுக்காத போராட்டம் ஒன்றை நடத்தினுர். கட்சியின் 6வது மத்திய கமிட்டியின் 6வது பிளீனக் கூட்டத்தில் நடந்த போராட்டத்தில் மாபெரும் வெற்றி ஈட்டப்பட்டது.

## முக்கியமான பிரச்சினை

கட்சிக்குள்ளே இரண்டு நெறிகளுக்கிடையே நடக்கும் போராட்டத்தை எவ்வாறு கண்டுகொள்வது என்பதும், அப் போராட்டத்தை எவ்வாறு கையாள்வது என்பதும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சி ஒன்றை கட்டியெழுப்புவதிலுள்ள முக்கியமானதொரு பிரச்சினையாகும். 1937ல் தலைவர் மாஓ 'நடைமுறைபற்றி', "முரண்பாடுபற்றி" என்ற இரு மகத்தான தத்துவார்த்தக் கட்டுரைகளையும் "சுயேச்சைவாதத்துக்கு எதிராகப் போராடுவீர்" என்ற கட்டுரையையும் இதர கட்டுரைகளையும் வெளியிட்டார். அவற்றில் அவர் சந்தர்ப்பவாதத்தைத் தத்துவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும், சித்தாந்த ரீதியிலும் கடுமையாக விமர்சித்த அதேவேளையில் கட்சிக்குள்ளே உள்ள முரண்பாடுகள் என்ற தத்துவத்தை தொடர்ச்சியாக விளக்கினுர். தலைவர் மாஓ சுட்டிக்காட்டியதாவது: "பல்வேறு விதமான கருத்துகளுக்கிடையில் எதிர்ப்பும் போராட்டமும் கட்சிக்குள் தொடர்ச்சியாக நிகழ்கின்றன; இது கட்சிக்குள்ளே வர்க்கங்களுக்கிடையேயும் சமுதாயத்திலுள்ள புதியதற்கும் பழையதுக்கும் இடையேயும் உள்ள முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகும். கட்சிக்குள்ளே முரண்பாடுகள் இல்லாவிட்டால், அவற்றைத் தீர்ப்பதற்கு எதுவித சித்தாந்தப் போராட்டங்களும் நடத்தப்படாவிட்டால், கட்சியின் வாழ்வு ஒரு முடிவுக்கு வந்து விடும்."

## கட்சி ஊழியர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தேவையான தரங்கள்

கட்சிக்குள்ளே நடக்கும் சித்தாந்தப் போராட்டங்களைக் கையாள்வதற்கான கோட்பாட்டை தலைவர் மாஓ அமைத்துத் தந்தார். அதாவது: "கட்சி ஒரு புறத்தில் தவறுன சிந்தனைக்கு எதிராக கடுமையான போராட்டத்தை நடத்தவும், மறுபுறத்தில் தவறுகள் இழைத்துள்ள தோழர்கள் விழித்தெழுவதற்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கவும் வேண்டும்." கட்சிக்குள்ளே உள்ள சரியான கருத்துக்களுக்கும் தவருன கருத்துக்களுக்குமிடையிலான முரண்பாடுகள் குறிப்பிட்ட சமயங்களில் பகைமையான முரண்பாடுகளாகவும் மாறமுடியும் என்பதையும் மிகவும் ஆழமாகப் புரியும் விதத்தில் அவர் சுட்டிக்காட்டினுர். "மகத்தான புரட்சிக்குத் தலைமை அளிக்க ஒரு மகத்தான கட்சியும் முதலாந்தர ஊழியர்கள் பலரும் தேவைப்படுவர்" அவர் கட்சி உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் தேவையான தரங்களையும், வேலை முறையையும் முன்வைத்தார். "அவர்கள் மார்க்சிஸம்— லெனினிஸத்தில் நன்கு அறிவுள்ள, அரசியல் ரீதியில் நீண்ட நோக்குடைய வேலையில் திறமைமிக்க, சுய—தியாக உணர்வு நிறைந்த, பிரச்சினைகளைச் சுயமாக கையாளும் திறன்படைத்த, இடையூறுகளுக்கிடையிலும் உறுதிபடைத்தவர்களாயுள்ள, தேசத்துக்கும் ,வர்க்கத்திற்கும், கட்சிக்கும் சேவை செய்வதில் விஸ்வாசமும், அர்ப்பணமும் செய்பவர்களாயுள்ள ஊழியர்களாகவும் தலைவர்களாகவும் இருக்கவேண்டும். கட்சி தனது உறுப்பினர்கள் வெகுஜனங்களுடனை தொடர்புகளுக்கு இந்தஊழியர்களையும் தலைவர்களையும் தான் நம்பியிருக்கிறது; அத்துடன், அவர்களது உறுதியான தலைமைமீதுதங்கி நிற்பதன் மூலம் மட்டும்தான் எதிரிகளைத் தோற்கடிப்பதில் கட்சி வெற்றி பெறமுடியும். அத்த

# ...ஓவின் தத்துவத்தை

கய ஊழியர்கள் சுயநலத் தன்மையிலிருந்தும், தனிநபர் வீரத்திலிருந்தும், பகட்டான ஆரவாரத்திலிருந்தும், சோம்பலிலிருந்தும், மந்தப்போக்கிலிருந்தும். அகங்காரத்தனமான ஒரு முனைவாதப் போக்கிலிருந்தும் விடுப்பட்டவர்களாக இருக்க வேண்டும்; அத்துடன் அவர்கள் தன்னலமற்ற தேசிய, வர்க்க வீரர்களாக இருக்க வேண்டும்.''

அதே ஆண்டு அவர் வடக்கு ஷென்ஸி கல்லூரிக்கு எழுதிய கட்டுரையில் இச் சிந்தனையை மீண்டும் வலியுறுத்தினார்: ஏராளமான மக்களை புரட்சியின் முன்னணி படையினராகப் பயிற்றுவிப்பது அவசியமாகும். அரசியல் யரீதியில் ஆழ்ந்த நோக்குடையவர்கள், போராட்டம், சுயதியாகம் என்ற உணர்வு கொண்டவர்கள். விஸ்வாசமிக்க, சுறுசுறுப்பான நேராக நிற்கும் பரந்த மனப்பான்மையுடையவர்கள்; தன்னலங்கருதாத ஆனால், நாட்டினதும் சமுதாயத்தினதும் விடுதலைக்காக மனப்பூர்வமாக இருப்பவர்கள்; எதுவித தொல்லைகளையும் கண்டு அஞ்சாத, ஆனால் தொல்லைகளுக்கு மத்தியிலும் விடாப்பிடியாக நின்று துணிச்சலுடன் முன்னேறிச் செல்பவர்கள்; உயர்ந்தவர்கள் அல்லாத, பலம் படைத்தவர்களல்லாத, புகழ் விரும்பாத ஆனால் மனப்பூர்வமானவர்களும் நடைமுறை அறிவு நிறைந்தவர்களுமாவர். இத்தகைய முன்னணி வீரர்களில் பலரை சீனம் தன்னகத்தே கொண்டிருக்குமேயானல் சீனப் புரட்சியின் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டு விடும்''

## கட்சி உறுப்பினர்களுக்கு கல்வியூட்டும் பிரச்சினை

தலைவர் மாஓவின் இப் போதனைகள் யாவும், ''நோர்மன் பெத்யூனின் ஞாபகார்த்தமாக'' ''மக்களுக்குச் சேவை செய்க'' ''மலைகளை அகற்றிய மூடக் கிழவன்'' போன்ற பின்னர் எழுதப்பட்ட அதியற்புதமான கட்டுரைகளும் கட்சி உறுப்பினர்களுக்கான அம்சங்களை தெட்டத் தெளிவாக முன்வைத்தன. இவை யாவும் தலைவர் மாஓவினல் விளக்கிக் கூறப்பட்டவாறும், கட்சியின் 9வது தேசிய காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட கட்சியின் புதிய சட்ட திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறும் கட்சி உறுப்பினர்களுக்கான ஐந்து தேவைகளின் பிரகாரம் அமைந்தவையாகும். (அவையாவன:

1. மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையை உயிருடன் படித்து உயிருடன் நடைமுறைப் படுத்தவேண்டும்.

2. சீனுவினதும், உலகினதும் பெருந்தொகையான மக்களின் நலனுக்காகச் செயல்படல்வேண்டும்.

3. தவருகத் தம்மை எதிர்த்துள்ள ஆனல், நேர்மையுடன் தமது தவறுகளைத் திருத்திக்கொள்கிறவர்கள் உட்பட பெருந்தொகையினருடன் ஐக்கியப்படும் திறமையுடையவர்களாய் இருத்தல் வேண்டும். இருந்தபோதிலும், பதவி வேட்டைக்காரர்கள் சதிகாரர்கள் இரட்டை வேஷக்காரர்கள் ஆகியோர் கட்சியின் தலைமையை அல்லது அரசாங்கத்தின் தலைமையை எந்த மட்டத்திலாவது அபகரிப்பதை தடை செய்யவும், கட்சியினதும் அரசாங்கத்தினதும் தலைமை எந்த வேலையிலும் மார்க்சிஸ புரட்சிகரவாதிகளின் கையில் இருக்கச் செய்யவும் விசேஷ விழிப்புடன் இருக்கவேண்டும்.

4. பிரச்சினைகள் தோன்றும்போது வெகுஜனங்களுடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

5. விமர்சனம் செய்வதிலும் துணிகரமாயிருத்தல் வேண்டும்.)

எமது கட்சியின் வரலாற்றைக் கொண்டு நோக்கும் போது, தலைவர் மாஓவின் இக் கோட்பாடுகளுக்கு ஏற்ப எவரெவர் செயல்படுகின்றனரோ அவர்கள் கட்சியில் நிலைத்து நிற்க முடியும்; இவற்றுக்கு எதிராகச் செயல்படுவோருக்கு நிச்சயமாக முடியாது.

கட்சி உறுப்பினர்களுக்கும் கல்வியூட்டுவது என்ற பிரச்சினை சாராம்சத்தில் அவர்களது உலக நோக்குக்குப் புதிய வார்ப்புக் கொடுக்கும் பிரச்சினையாகும். கட்சியில் அவர்கள் சித்தாந்த ரீதியில் முழுமையாக இணைய உதவும் பிரச்சினையாகும். ''யெனுன் கருத்தரங்கில் இலக்கியத்தையும், கலையையும் பற்றிய உரை''யில் தலைவர் மாஓ மிகவும் ஆழமான முறையில் சுட்டிக் காட்டுகிருர். ''கம்யூனிஸ்ட் கட்சியில் ஸ்தாபன ரீதியாகச் சேர்ந்துள்ள, ஆனல் கட்சியில் முழுமையாகவோ அல்லது மொத்தத்தில் சித்தாந்த ரீதியிலோ கட்சியில் இன்னும் சேராத கட்சி உறுப்பினர்கள் அநேகமானேர் இருக்கின்றனர்.'' தலைவர் மாஓ கூறினர்: ஸ்தாபனரீதியில் விஷயங்களை ஒழுங்காக்குவதற்கு முதலில் சித்தாந்தரீதியில் அவ்வாறு நாம் செய்வதும் பாட்டாளி வர்க்க விரோத சித்தாந்தத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்க சித்தாந்தப் போராட்டம் ஒன்றை நாம் தொடுப்பதும் அவசியமாகிறது.''

—தொடரும்

# பிரச்சினையைத் தீர்ப்பது துப்பாக்கிகளே

பாலஸ்தீன விடுதலை இலட்சியத்தை ஒழித்துக் கட்டுவதற்கான திட்டங்கள் எம்மைச் சுற்றிவரச் சூழ்ந்துள்ளன. சதிகள் எனும் மேகங்கள் இத் திட்டங்களை எம்மீது திணிக்க ஒன்று திரள்கின்றன. குறிப்பாக இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு ரோஜர்ஸ் திட்டத்தை முன்வைத்திருப்பதனுல் சரணுகதித் தன்மை வாய்ந்த தீர்வுகளைக் காணுவதற்கான சூழ்ச்சிகள் முன்னென்றுமே இல்லாத மட்டத்தை அடைந்துள்ளன என்று நாங்கள் கூறினுல் அது மிகையாகாது.

ரோஜர்ஸ் திட்டம் புதிதாக எதையுமே கூறவில்லை; பாலஸ்தீனப் பிரச்சினையை ஒழித்துக் கட்டுவதிலும், பாலஸ்தீன மக்கள் புரட்சியை நசுக்கிய பின்னர் பாலஸ்தீன மக்களை பூண்டோடு அழித்தொழிப்பதிலும் தீவிரமாக இருக்கும் அமெரிக்க - ஸியோனிஸ சூழ்ச்சியின் பரிபூரண வடிவத்தை ஒருவர் இத் திட்டத்தில் இலகுவாகக்கண்டு கொள்ள முடியும். இத் திட்டம் பின்வரும் பிரச்சினைகளையே வளைய வளைய சுற்றி வருகின்றன:

முதலாவதாக, சகல ''தரப்பின''ரும் ஒரே தரத்தில் ஒரே அந்தஸ்தில் - வைக்கப்பட்டிருக்கின்றனர்; பாலஸ்தீனம், சினய், கோலான் ஹைட்ஸ் ஆகியவற்றை ஆக்கிரமித்துக் கைப்பற்றியுள்ளோரும், ஆக்கிரமிப்புக்கும் கைப்பற்றலுக்கும் பலியானேரும் ஒரே தரத்தில் - ஒரே அந்தஸ்தில் - வைக்கப்பட்டிருக்கின்றனர். பாலஸ்தீன மக்கள் ஓர் அகதிகள் கூட்டத்தினராயிருப்பதால் பாலஸ்தீனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினராக உண்மையிலேயே கருதப்படவில்லை; அதே சமயத்தில் ''சம்பந்தப்பட்ட''மற்ற நாடுகள் நாடற்ற இந்த மக்களுக்காக நல்ல மனதுடன் தீர்வு காண வேண்டும்.

இரண்டாவதாக, முதலில் ஜாரிங் மூலம்—மறைமுகமாகவும், பின்னர் ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டதும், அதாவது, பாலஸ்தீனப் புரட்சி ஒழித்துக்கட்டப்பட்ட பின் நேரடியாகவும் அரபுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையே பேச்சு வேண்டும் என்று இத் திட்டம் வார்த்தைகள் நடைபெற அழுத்திக் கூறுகிறது.

மூன்ருவதாக, 1967 ஜூன் யுத்தம் தொட்டு இஸ்ரேல் கைப்பற்றிய பூமியிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் வாபஸாவதற்குப் பிரதி உபகாரமாக நியாயமான சமா

7-ம் பக்கம் பார்க்க

## கலையை ஆயுதமாக்குவோம்

-நவயுகக்கவி-

தார்மீக வாழ்வு என்றும் தரணியில் தளிர்ப்பதாக
பூர்ஷுவா அறிஞரெல்லாம் ஜூருடா விடுகிருர்கள்.
வம்பர் அவர் கூற்றை நம்பில்:
''வரலாற்று மாந்தரெல்லாம்
அம்புவியிற் தார்மீக உணர்வோங்கி அன்பு—மிக்கு
அடிமை விலங்கறுத்துக்
குடிமை முறையமைத்தார் — பின்
குடிமைத் தடை தகர்த்துச்
சுதந்திரம் தொழிலில் தந்தார்;
இன்றோ —
தொழிலினில் மட்டுமின்றி அரசியல் மற்று — யாவும்
உளதேதோ அவற்றிலெல்லாம்
சமமான உரிமை தந்து
சமத்துவம், சுதந்திரம், சகோதரத் துவம் சமைத்தார்!
தார்மீக உணர்வு மேலும் தடையின்றி வளர்வதாலே
பார்மீது பலாத்காரம் மக்களுக்குரியதன்று;
அவசியம் உள்ளதாலே — அது
அரசுக்கு மட்டும் தேவை!''

ஹா!

உண்மை உணர்ந்தவரின் உதிரம் கொதிக்குதடா!
வண்மை மிகு பாட்டாளி! அனுங்காமல் அனன்றெழுடா!
பாட்டாளி உழைப்பினையே சுரண்டிக் கொழுக்கின்ற
காட்டு மிராண்டிகளைக் கருவறுக்க வேணுமடா!

திரிபுவாதி விட்ட இருஞுதானம் தெரிந்த நாங்கள்
பிற்போக்கர் திரித்துரைக்கும் வரலாற்றை அறியோமோ?
வரலாறு இன்னதெனத்
தரமாக யாமறிவோம்:
ஊழி காலமாய்ச் சுரண்டல் வர்க்கங்கள்
''ஊழ்'' எனக் கூறி உழைப்போரைச் சுரண்டினர்.
இலக்கியம் சமயம் இரண்டிலும் அவர்கள்
தலைவிதி என்ற தத்துவம் புகுத்திப்
பெருந்தொகை மக்களின் உழைப்பைச் சுரண்டிப்
பருத்த பன்றியாய்க் கொழுத்துத் திமிர்த்தனர்.
அரசியல் சமுகம் பொருள்நிலை அறிவெனும்
பரந்த மானிட வாழ்வின் அடிப்படை
அம்சங்களிலெல்லாம் அடிமைத்தனத்தை
வம்சாவழியாய்ப் புகுத்தி இறுக்கினர்.
இலக்கியம் சமயம் இரண்டையும் இதற்குப்
பலமிகு கருவியாய்ப் பாவித்து வந்தனர்!

இன்றும் —
புண்ணுக்குப் புனுகு பூசும்
கைவண்ணம் மிக்கதாலே
பூர்ஷுவா வர்க்கத்தோர்கள்
பாரெங்கும் பதைத்தெழுந்த
பாட்டாளி மக்கள் தங்கள்
வாட்டத்தை வாட்ட எண்ணிப்
புரட்சியைச் செய்வரென்ற
சிரங்கு நோய் உளம் வருத்த
பார் ஆளும் மன்றவாதம் அஹிம்சை தார் மீகவாதம்;
மார்க்ஸீய சிந்தனைக்குச் சூட்டிடும் புரட்டுவாதம்;
'சிந்தனை இனியதாயின் வாழ்க்கையே இனிக்கும்' என்ற
நிந்தனைக் குரியதான நீசக் கருத்து வாதம்;
பூர்ஷுவா ஆட்சி சாயப் புரட்சியைச் செய்வதற்குக்
கருவியாய்க் கலையைக் கொள்ளும்
நிலையினைத் தவிர்க்க எண்ணிக்
'கலையது கலையினுக்கே
அர்ப்பணம்' என்னும் வாதம்;

என்ற பல வாதங்களால்
என்றும் எமை ஏமாற்றிச்
சுரண்டல் அமைப்பதனைக்
கருத்தாகக் காப்பாற்றத்
தத்துவங்கள் பல
சிந்திரமாய்ச் செய்துள்ளார்!

வர்க்கப் போரின் முனையை மழுக்கும்
பூர்ஷுவாத் தத்துவம் பூண்டுடன் அழிப்போம்!
பாட்டாளி வர்க்கப் புரட்சியினுலே
கூட்டொடு சுரண்டலைக் கொன்று முடிப்போம்!
பூர்ஷுவா வர்க்க அரசினைத் தகர்த்துப்
பாரினில் பாட்டாளி அரசினை நிறுவக்
கலையும் கூரிய ஆயுதம் ஒன்றென
நிலையாய் இன்று வரலாறு காட்டும்
பாடம் உணர்ந்து,
வாடும் மக்கள்
வீறு—கொண்டெழுந்து சுரண்டலமைப்பினை
நீருக்கி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிக்
கலையினைப் பாட்டாளி வர்க்கத்தினரின்
விலைமதிப்பற்றதோர் ஆயுதமாக்குவோம்!

## உலக வலம்

உஸ்மான்

# லுசாக்கா மாநாடு சாதிக்கப்போவது என்ன?

பிரமாண்டமான பிரசார ஏற்பாட்டுடன் கடந்த 8ந் திகதி காலையில் லுசாக்காவில் ''கூட்டுச் சேரா நாடுகள்'' உச்சி மாநாடு தொடங்கி நடைபெற்றது. அதன் முடிவுகளும் பெறுபேறுகளும் எவ்வாறு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாகப் பிரசாரஞ் செய்யப்பட்டபோதும் அடிப்படையில் ''கூட்டுச் சேரா'' நாடுகளின் காலம் முடிந்துவிட்டது என்றே கூறத் தோன்றுகிறது.

ஒரு நாட்டிலுள்ள வர்க்கங்களைப் பொறுத்தளவில் தோழர் மாஓ இரத்தினச் சுருக்கமாய்க் கூறியிருப்பது போல, ஒன்றில் தொழிலாளி வர்க்கத்தின் கையோங்கியிருக்க வேண்டும், அல்லது முதலாளி வர்க்கத்தின் கையோங்கி இருக்க வேண்டும். இரண்டும் சமமாக இருப்பது என்பது வரலாற்றில் கிடையாது. அதைப்போலவே நாடுகளும் ஒன்றில் ஏகாதிபத்திய சார்பாக இருக்கும்; அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பில் இருக்கும். இரண்டையும் யோட்டுக் குழப்பும் நாடுகளும் உண்டு.

பண்டுங் மாநாட்டில் பஞ்சசீலம் முதலியன பிரகடனப்படுத்தப்பட்ட காலம் வேறு; உலகமெங்கும் தேசிய விடுதலை இயக்கங்கள் கொழுந்துவிட்டெரியும் இன்றைய காலகட்டம் வேறு. ''நடுநிலைமை'' என்ற கோட்பாட்டை உரத்துக் கூவும் டிட்டோ, நாஸர், நேருவின் மகள் ஆகிய மூவரையும் மாத்திரம் உதாரணமாக எடுத்துக் கொள்வோம்; யூகோஸ்லாவியா உண்மையில் அமெரிக்க வட்டத்திற்குள்ளேயே இயங்குகிறது; எகிப்து சமூக ஏகாதிபத்திய ரஷ்யாவின் பிடிக்குள் சிக்கித் தவிக்கிறது. இந்தியா அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், ரஷ்ய ஏகாதிபத்தியத்தினதும் சுரண்டலுக்கு ஆளாகி உள்ளும் புறமும் சிக்கலில் மாட்டித் தவிக்கிறது. அதன் ஆளும் வர்க்கம் இருவிதமான ஏகாதிபத்தியத்தையும் சார்ந்து வயிறு வளர்க்கிறது; வாய்ச் சவடால் அடிக்கிறது.

இந்நிலையில் ''நடுநிலைமை'' என்பது உதட்டளவிலேயன்றி உண்மையில் அல்ல. லுசாக்கா மாநாடு ஐ. நா. சபைபோல யாவரையும் கொள்ளும் விவாதமேடையேயாகும். மக்களின் அபிலாஷைகள் அங்கு பிரதிபலிக்கப் போவதில்லை. கம்போடிய தேசிய விடுதலை முன்னணி ஆட்சிக்கு அங்கீகாரம் வழங்க மறுக்கும் நாடுகளும் கூடுகின்றன. இவற்றால் உருப்படியாக என்ன செய்ய முடியும்? அமெரிக்கா காலனியான தென்வியட்நாம் ''கூட்டணி சேராத'' நாடாக லுசாக்காவில் கலந்து கொள்கிறது. இதில் அர்த்தம் உண்டா?

வெறும் கொள்கையளவில் ''கூட்டுச் சேரா'' நாடு என்று ஒன்று இல்லை. ஒவ்வொரு பிரச்சினையில்தான் ஒருவரை இனங்கண்டு கொள்ளலாம். அதுபோல ஒரு பிரச்சினையில் ஒரு நாடு மேற்கொள்ளும் நடவடிக்கையே தீர்க்கமானதாகும். இன்று ஒரேயொரு அளவுகோல்தான் உண்டு. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற விஷயத்தில் ஒரு நாடு என்ன கொள்கையையும் செயலையும் கடைப்பிடிக்கிறது என்பதே பிரதானமானதாகும். அதைக் கொண்டே லுசாக்கா மாநாட்டையும் அதன் ''பயபக்தியான'' தீர்மானங்களையும் நாம் கணிக்க முடியும்.

★

## பாசிஸ்ட் சுஹர்த்தோவுக்கு பலத்த எதிர்ப்பு

## ஏகாதிபத்தியவாதிகளின் வாயடைக்கும் சம்பவங்கள்

மக்களின் எதிரிகளுக்கு தமது தேசத்தில் மட்டுமல்லாது, உலகமெங்கும் எதிர்ப்பு இருக்கும் என்ற உண்மையை கடந்த வாரம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்த இந்தோனேஷிய ஆளும் கும்பல் தலைவன் சுஹார்த்தோ நன்கு உணர்ந்திருப்பான். இந்தோனேஷியாவை காலனியாக ஆண்ட ஒல்லாந்து நாட்டுக்கு ''ராஜாங்க விஜயம்'' மேற்கொண்ட சுஹார்த்தோ கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் பேரிலேயே அங்கு சென்றான். பொதுவாக ''ராஜாங்க விஜயம்'' என்றால் ஒரு நாட்டின் தலைவரை பிற நாட்டுத் தலைவர்கள் சம்பிரதாய மரியாதையுடன் வீதிகளில் பவனியாக அழைத்துச் செல்வதே வழக்கம். குறிப்பாக விமான நிலையத்திலிருந்து ராஜாங்க மாளிகை வரையிலாவது திறந்த மோட்டார் வாகனத்தில் செல்வது சர்வ சாதாரணம்.

இராணுவ எதிர்ப் புரட்சியின்போது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் லட்சக்கணக்கானோரைக் கொன்றுகுவித்த பாசிஸ்டுக் கும்பலின் தலைவனை அரசியல் பகைவர்கள் சுட்டுவிடக்கூடும் என்று சுஹார்த்தோ ஆட்சி அஞ்சிய தன் விளைவாகவே ஒல்லாந்து அரசாங்கம் ராஜபவனி எதுவுமின்றி மிக இரகசியமாக சுஹார்த்தோவின் நடமாட்டத்தை வைத்தது.

ஒல்லாந்து விஜயத்தை முடித்துக்கொண்டு சுஹார்த்தோ, நவநாஜிகள் அரசபுரியும் மேற்கு ஜெர்மனிக்குச் சென்றான். தலைநகரில் போயிறங்கு முன்னரே மாணவரும் தொழிலாளரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ஜெர்மன் வாலிபர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது பலரும் அறிந்ததே. பொலிஸாருடன் கைகலப்பதும், தெருக்களில் பலாத்கார ஆர்ப்பாட்டங்களும் அடிக்கடி நிகழ்வாகிவிட்டன.

இந்நிலையில் தமது அடிவருடிகளில் ஒருவனாகிய இராணுவத் தலைவனை அவதிக்குள் உட்படுத்த விரும்பாத மேற்கு ஜெர்மன் அரசாங்கம் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. விமான நிலையத்தில் மாத்திரம் சுமார் 600 பொலிஸ் படையினர் பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொண்டனராம்.

மோட்டார் வாகனத்தில் போவதற்குப் பதிலாக ஹெலிகொப்டர் மூலம் நகருக்குள் சென்றானும். பொது மக்கள் கண்படா வகையில் இந்தோனேஷியப் பொம்மையை மூடி மறைத்தனராம் மேற்கு ஜெர்மன் அதிகாரிகள். அளவுக்கு மீறிய பந்தோபஸ்து நடவடிக்கைகளைக் கண்ணுற்ற மேற்கு ஜெர்மன் முதலாளித்துவப் பத்திரிகைகளே இக் கோரக் கூத்தைக் கண்டித்து எழுதியிருக்கின்றன. ''பிறநாட்டுத் தலைவர் ஒருவரைப் போலல்லாது, பயங்கரமான சிறைக் கைதி ஒருவனைப் போல, இந்தோனேஷியத் தலைவரை எமது அரசாங்கம் பலவிதமான வாகனங்களில் மூடி மறைத்துக் கொண்டு செல்வதைப் பார்க்கும்போது, இவ் விஜயத்தை ராஜாங்க விஜயம் என்று கூறலாமோ என்பது சந்தேகமே. எமது நாட்டையும் நாட்டு மக்களையும் சுஹார்த்தோ ஒரு சிறிதளவாகிலும் பார்த்திருப்பார் என்பதும் ஐயமே'' என்று பிரபல ஜெர்மன் முதலாளித்துவப் பத்திரிகை ஒன்று தலையங்கம் எழுதியிருந்தது. ஏகாதிபத்திய தலைவர்களுக்கும் மக்கள் எதிரிகளுக்கும் சென்ற இடமெல்லாம் எதிர்ப்பு என்பது இன்றைய யுகத்தின் நியதிகளில் ஒன்று அல்லவா. மேற்கு ஜெர்மன் ஜனநாயகவாதிகளும் தேசபக்த மாணவரும் காட்டிய அரசியல் உணர்வு எமக்கு நல்ல படிப்பினையாகும்.

★

கம்போடியாவில் எதிர்ப் புரட்சி ஏற்பட்டபின், அதிபர் சிஹானுக் தலைமையில் உண்மையான-சட்ட ரீதியான-அரசாங்கம் பீக்கிங் நகரில் நிறுவப்பட்ட போதும், கடுமையான தேச விடுதலைப் போர் கம்போடியாவின் பல மாகாணங்களில் நடைபெற்ற போதும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் ஊதுகுழல்களான ''சர்வதேச செய்தி ஸ்தாபனங்களும்'' கம்போடியாவில், லொன் நொல்-சிறீமதாக் கும்பலை எதிர்த்து அந்நிய வடவியட்நாமிய படைகளே கொரில்லா யுத்தம் நடத்துகின்றன என்று உரத்த குரலில் காது செவிடுபடும்படி பிரச்சாரஞ் செய்து வந்தன. (எமது நாட்டு ''முற்போக்கு'' அரசாங்க ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்திகள் கூட இதையே ஒப்புவித்து வருகின்றன.)

ஆனால் சமீபத்தில் ஏகாதிபத்தியவாதிகள் வாயடைக்கும் வகையில் சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் அரைப் பங்குக்கு மேல் தற்சமயம் கெமர் தேசிய விடுதலைப் படைகள் வசமுள்ளன, தலைநகரான நொம் பென்னில் இருந்துகொண்டு லொன் நொல் ஆட்சியைப் பற்றிப் புழுகு கட்டுரைகளும் செய்திகளும் மேற்கு நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்த சில அமெரிக்க-பிரெஞ்சுப் பத்திரிகை நிருபர்கள் சிலர் யுத்த களத்தைப் பார்வையிடச் சென்றனர். அங்கே தேசிய விடுதலைப் படையினரால் கைப்பற்றப்பட்டு நான்கு ஐந்து வாரங்கள் விடுதலை செய்யப்பெற்ற மாகாணங்களில் கைதிகளாக இருந்துவிட்டு இப்பொழுது நொம் பென்னுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் ஒருவன் ஏகாதிபத்தியத் தலைமை ஏடான டைம் பத்திரிகை நிருபர். எவ்வளவுதான் விரும்பிய போதும், கம்போடியாவில் இன்று போரிடும் தேசபக்தர்கள் கம்போடிய-கெமர்-மக்களே என்பதை அவனால் மறைக்க முடியவில்லை.

வேண்டா வெறுப்பாக அவனது ''நேரில் கண்ட நிலைமை'' என்ற அறிக்கையை டைம் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. சீன கம்யூனிஸ்டுத் தத்துவத்தின் செல்வாக்கைப் பற்றியும் ஆயுத உதவியைப் பற்றியும் பலவிதமாய்ச் சோடித்து எழுதிய போதும் கம்போடிய தேசிய விடுதலை முன்னணி உண்மையான மக்கள் முன்னணி என்பதை அமெரிக்க நிருபர்களால் இனியும் மறுக்க இயலாது.

அதே சமயத்தில் லொன் நொல் ஆட்சி ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் கூலிப் படைகளை அமர்த்தியிருப்பதற்குச் சான்றிதல்கள் உள்ளன, இகனொமிக் றிவியூ என்ற பத்திரிகையின் நிருபனடிம் அல்மன் என்பவன் எழுதுகையில், சமீபத்தில், தான் நொம் பென்னுக்குச் சென்ற போது, பல புது முகங்களைக் கண்டானும். நல்ல சம்பளம் கிடைக்கும் என்று அறிந்ததும் பிரசித்திபெற்ற வெள்ளைத் தோல் கூலிப் போர் வீரர்கள் நொம்பெனில் வந்து குழுமியுள்ளனர். கொங்கோ, பியாப்ரா, வியட்நாம் முதலிய இடங்களில் களம் பல கண்ட தொழில்மன்னர்கள் இவர்கள் கம்போடிய இராணுவ ஜெனரல்களுடன் இவர்கள் பேரம் பேசிக் கொண்டிருக்கின்றனர் ஒரு இரவுக்கு மாத்திரம் இருபது அமெரிக்க டாலர் கூலி என்று சிலர் கூறினராம்.

முற்காலத்திலே நாஜித் தொடர்புடைய பிரசித்தி பெற்ற ஜெர்மன் ஒருவனும் அங்கு காணப்பட்டானும். பியாப்ரா யுத்தத்தில் தேசபக்த பியாப்ரா மக்கள் மீது குண்டு பொழிய ரஷ்ய மிக் விமானங்களை ஓட்டிப் புகழ் பெற்ற அவன், இப்பொழுது அமெரிக்க டாலர்களைப் பெற்று கம்போடிய தேசபக்தர்களைக் கொல்லச் சித்தமாயிருக்கிறானும். சகல விதமான படைகளையும் கம்போடிய மக்கள் முடியடித்து விரைவில் வெற்றிவாகை சூடுவர் என்பதில் ஐயமில்லை.

உழைக்கும் மக்களின்
உரிமைக் குரல்!
பாட்டாளி மக்களின்
புரட்சிக் குரல்

தொழிலாளி

வாரப் பத்திரிகை

புதிய சந்தா

| | |
|---|---|
| 1 வருடம் | 7-50 |
| 6 மாதம் | 3-75 |
| 3 மாதம் | 2-00 |

# பிற்போக்கு சங்கங்கள் உடைகின்றன

# அட்டனில் செங். சங்கம் வளர்கிறது

தேர்தலுக்குப் பின் பல பிற்போக்குச் சங்கங்களிலிருந்து தொழிலாளர் விலகி செங்கொடிச் சங்கத்தில் சேருகின்றனர். இந்த மாதத்தில் மட்டும் பொகவந்தலா லெட்சுமி தோட்டம், மஸ்கெலியா லெட்சுமி தோட்டம், எமலா தோட்டம் பணியகணக்கு, மரே குருப் ராஜமலை, படடல்கலை தோட்டம் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தொழிலாளர் அட்டன் மாவட்டத்தில் செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்துள்ளனர்.

மற்ற பல பகுதிகளிலும் தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்தவண்ணமுள்ளனர்.

★

## வேலைநிறுத்தங்கள்

அட்டன் அந்தோணிமலை, கவாலமலை, சின்ன தொப்பித்தோட்டம் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இவர்கள் செங்கொடிச் சங்கத்தையும் மற்றச் சங்கங்களையும் சேர்ந்தவர்கள். இத்தோட்டத்திலுள்ள தொண்டமான் காங்கிரஸ் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ள வேண்டாமென தொண்டமான் சங்கப் பிரதிநிதி போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தபோதிலும் தொழிலாளர் தொடர்ந்து போராடுகின்றனர்.

★

## யுலிபீல்ட் குரூப் வேலைநிறுத்தம்

அட்டன் யுலிபீல்ட் குரூப் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துகின்றனர். ஆயுதமேந்திய பொலிசார் தோட்டத்திற்கு சென்று தொழிலாளரைப் பயமுறுத்தி வேலைக்குப் போகச் சொன்னபோது, புதிய அரசாங்கம் தமக்குப் பூரண அதிகாரம் கொடுத்திருப்பதாகவும் வேலைநிறுத்தம் செய்பவர்கள் தாக்கப்படுவார்களென்றும் பயமுறுத்தினர். பொலிஸ் மிரட்டலுக்குப் பயப்படாமல் தொழிலாளர் வேலைக்குப்போக மறுத்தனர்.

★

## தோழர் பொன்னம்பலம் விடுதலை

ரொத்தஸ் தோட்டப் பங்களாவைத் தாக்கி தோட்டத்தில் குழப்பம் விளைவித்ததாக அட்டன் பொலிஸ், செங்கொடிச் சங்கப் பிரதிநிதி வி. எஸ். பொன்னம்பலமும், ரொத்தஸ் தோட்டத் தலைவர் நாராயணசாமி, இதே தோட்டத்தைச் சேர்ந்த கணேசன், செல்லப்பன் ஆகியோரைக் கைதுசெய்து அட்டன் கோர்டில் வழக்கு தாக்கல் செய்தது.

தோட்டத் துரையின் புகாருக்கு ஆதரவான சாட்சி இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

## வெ. நெ. தொழிலாளர் வேலைநிறுத்தம்

வெள்ளவத்தை நெசவாலையிலுள்ள எண். 4வது செட்டிலுள்ள தொழிலாளர்கள் இரவு ஷிப்ட் அலவன்ஸ் கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். இவ் வேலை நிறுத்தத்தைத் தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன. முதலாளிகள் விட்டுக்கொடுப்பதாயில்லை.

செப்டம்பர் மாதம் 1ந் திகதி தொழில் கந்தோரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, நமது தொழிற் சங்கம் இக் கோரிக்கைக்குப் பதிலாக வேறொரு கோரிக்கையை முன்வைத்தது. மூன்ருவது ஷிப்ட் முற்றாக ஒழிக்கப்பட்டு அதில் கடமையாற்றும் சகல தொழிலாளர்களையும் எதுவித சம்பளக் குறைப்புமின்றி வேறு இடங்களில் வேலைக்கு அமர்த்த வேண்டும் என்பதே இந்த மாற்றுக் கோரிக்கையாகும். பேச்சுவார்த்தை நடைபெற்ற முதல் நாளன்று இக் கோரிக்கையை முதலாளிமார் ஏற்றுக் கொள்வதற்கான அறிகுறிகள் காட்டிய போதிலும், மறுநாள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான போது இக் கோரிக்கையை பரிசீலிப்பதற்குக்கூட முதலாளிமார் மறுத்துவிட்டனர்.

வெள்ளவத்தை ஆலையிலுள்ள சி. எம். யூ. கிளையுடன் முதலாளிமார் சேர்ந்து செயல்படுகிருர்கள் என்பதும், சி. எம். யூ. கிளையினர் முதலாளிமாரின் விடாப்பிடிக் கொள்கையை ஆதரிக்கிருர்கள் என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது. வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் வெற்றி ஆலைத் தொழிலாளர்களின் கைகளில் உள்ளது. எண். 4வது செட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு தயாராகுமாறு வெள்ளவத்தை நெசவாலையிலுள்ள சகல தொழிலாளர்களையும் அறைகூவி அழைக்கின்ருேம்.

ஆசிரியருக்குக் கடிதம்:

## ஏன் இந்தப் பாரபட்சம்?

பிரபல திரிபுவாதப் பிரமுகர் ஒருவர் குட்டையைக் குழப்புவதைப்போல ''வேலை இல்லாப் பிரச்சினை'' என்னும் தலைப்பில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு பெரும் சூன்யச் சொற்பொழிவு ஒன்றை ஆற்றினுர் எனத் தெரிய வருகின்றது.

முன்னுக்குப் பின் முரண்பாடாக அவரது பேச்சுக் காணப்பட்டதாம். எனவே மாணவரில் பலர் தோழர் வீ. ஏ. கந்தசாமிக்கும் அதே தலைப்பைக் கொடுத்து சிறு சொற்பொழிவொன்றை ஆற்றும்படி அதிபரிடம் ஓர் வேண்டுகோள் விடுத்தனர். அவ் வேண்டுகோள் பத்திரத்தில் இருபத்தைந்துக்கும் மேலான உயர்தர மாணவர்களும் கையொப்பம் இட்டுள்ளனராம்.

வேண்டுகோள் பத்திரம் அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போது, ''இங்கே அரசியல் வாதிகளுக்கு இடம் இல்லை!... இது பள்ளிக்கூடம்'' என்று முகத்தில் அறைந்தாற்போல் அதிபர் கூறிவிட்டாராம். பத்திரத்தைப் பார்க்கவும் மறுத்து விட்டாராம்.

அதிபரின் இச் செய்கையானது மாணவர் உள்ளத்தை பெரிதாகப் புண்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திரிபுவாத பிரமுகர் ஒரு அரசியல்வாதி என்பதை கனம் அதிபர் அறியமாட்டாரா?... அரசியல்வாதிகளுக்கு இடமில்லையென்ருல்... திரிபுவாதப் பிரமுகருக்கு எப்படி இடம் கிடைத்தது?... ஏன் இந்தப் பாரபட்சம்?... தயை கூர்ந்து அதிபர் கவனிப்பாராக!...

இப்படிக்கு,
பழைய மாணவன்
வைத்தீஸ்வர வித்தியாலயம்.

★

## சாவைக்கண்டு அஞ்சாதீர்!

முதலாளித்துவ ஆட்சினளரின் காவல் நாய்களாய பொலிஸ் படையினரின் அநியாயமான துப்பாக்கி சூட்டிற்கு கிளுகலையை சேர்ந்த இரு தோழர் பலியாகிய சம்பவம் நம்மை ஒரு கனம் திகைக்க வைக்கின்றது. தொழிலாளர் தலைவர் அசீஸ் உள்ள அரசாங்கம் ஆயிற்றே ஆகவே தொழிலாளர்களுக்கு பூரண பாதுகாப்பை இவ் அரசாங்கம் அளிக்கும் என நம்பிஞேருக்கு இது ஒரு சிறந்த பாடமாகும். பாராளுமன்ற பாதையில் தோன்றும் எந்த அரசும் பாட்டாளி மக்களுக்கு பாதுகாப்பு அளிக்காது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

இறந்த தோழர்கள் தமது உயிரை பதவிபெறவோ, பதவிகள் அடையவோ இழக்கவில்லை. ஆனுல் பாட்டாளி வர்க்கத்தின் உரிமையை நிலைநாட்ட செய்யும் ஒரு போராட்டத்திலேயே இழந்னர். கஷ்டங்களை கண்டு நடுங்கவில்லை, மரணத்தைக் கண்டும் அஞ்சாது இவர்கள் காட்டிய உதாரணம் நமக்கு வழிகாட்டுகிறது. தலைவர் மாஓ கூறுவதுபோல மக்களுக்காகவே தம்மைமாய்த்துக் கொண்ட இந்த நண்பரின் சாவும் விலைமதிக்க முடியாத ஒன்ருகும்.

இந்த தோழர் காட்டிய உறுதியையும், தியாக உணர்வையும், மற்ற தோழர்கள் அனைவருக்குமே ஒரு சிறந்த உதாரணமாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை, துப்பாக்கி தவிர பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வு பறிக்கப்படவில்லை. பறிக்கப்படவும் முடியாது.

தொழிளாள தோழர்களே, சாவைக் கண்டு அஞ்சாது ஒன்று பட்டு போராட துணிவோம்; வெல்லத் துணிவோம்.

அவர் பிரிவால் வாடும் தோழர்கள், உறவினர் அனைவருக்கும் அனுதாபங்கள் உரித்தாகுக.

எஸ். சுந்தரராஜ்
புதுமலை தோட்டம்
பசறை.

## பிரச்சினையைத்....

◎ 5-ம் பக்கத் தொடர்

தான''த்தை அடைவது என்ற போலிக்காரணத்தைக் காட்டிக் கொண்டும், இஸ்ரேலின் சுயாதிபத்தியம், சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை அங்கீகரிப்பது என்ற போலிக்காரணத்தைக்காட்டிக் கொண்டும் பாலஸ்தீன் விடுதலை இலட்சியத்தை ஒழித்துக் கட்டுவது - இந்த விதத்தில் ஐ. நா. பந்தோபஸ்து சபை எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் பாலஸ்தீன விடுதலை இலட்சியத்தைவும் பாலஸ்தீன அரபுகளையும் அழித்தொழிப்பது பற்றி உடன்படிக்கை ஏற்படவேண்டும்.

மேற்படி நோக்கங்களை அடைவதற்காக சூழ்ச்சிகள் புரிய போதுமான அவகாசம் கொடுப்பதற்கென மூன்று மாதம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்று ரோஜர்ஸ் திட்டம் கோருகிறது.

இப் புதிய அமெரிக்க சூழ்ச்சியில் காணப்படும் மிகவும் பயங்கரமான அம்சம் என்னவென்ருல், சில அரபுநாடுகளைப் படிப்படியாக படுகுழிக்குள் தள்ளிவிடும் பொருட்டு, ''நட்புறவு'' என்ற ஆடையைப் போர்த்தியுள்ளதாகும்; அப்போதுதான் பாலஸ்தீனப் பிரச்சினையை ஒழித்துக்கட்டும், பாலஸ்தீனப் புரட்சியை அழித்தொழிக்கும் மகாபாதகமான குற்றத்தில் அந்த அரபு நாடுகளும் இறுதியில் சிக்கியிருக்கும்.

இவையாவும் ஒரேயொரு விஷயத்தை மட்டுமே உணர்த்த முடியும்: அதாவது, இத் திட்டத்தை தீட்டியோர் எம்முடன் துப்பாக்கி - குண்டுகள் பரிபாஷையில் பேசி எமக்குத் தெட்டத்தெளிவாகப் புரிய வைப்பர் என்பதால், நாங்கள் எமது தேசிய ஐக்கியத்தையும் யுத்தத்திற்கான தயார் நிலையையும் பலப்படுத்தவும், எமது விழிப்புணர்வை உயர்த்தவும் வேண்டும்; அப்போதுதான் நாங்கள் ஆயுதங்களதும் வெகுஜனங்களதும் பலத்தைக் கொண்டு இப் புதிய சூழ்ச்சியை முறியடிக்கலாம்.

விலை எவ்வளவுதான் பெரிதாயிருந்தாலும் பரவாயில்லை; எமது புரட்சியையும் புனித இலட்சியத்தையும் பாதுகாக்கத் தயாராவதைத் தவிர எமக்கு வேறு எதுவித மார்க்கமுமில்லை. ஒரேயொரு அடிப்படை விஷயத்தை மட்டும் நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்; அதாவது முடிவில் விஷயத்தைத் தீர்ப்பது எமது துப்பாக்கிகளேயாகும்.

''பத்தாஹ்'' தலையங்கம்
24 - 7 - 1970

◎ 3-ம் பக்கத் தொடர்

தைப் படைப்பவராய் இருப்பார்கள் என்பதையும் நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் வளர்க்க விரும்பும் ''தேசிய'' இலக்கியம் எத்தகையதாய் உருப்பெறும் என்பதையும் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இன்னெரு விதத்தில் கூறுவதானுல், பத்திரிகை தடையைப் பற்றியும் குறிப்பிட்டுக் கொண்டு, அதேவேளையில் முதலாளித்துவப் பிரசுரங்களுக்குள் தரவேறுபாடு காண முற்படுபவர்கள் ஒரு காலை முன்வைத்து, இரண்டடி பின் வைப்பவர்களேயாவர்.

### தரத்தை யார் நிச்சயிப்பது

இன்னுமொன்று: இவர்கள் அடிக்கடி கூறும் தரத்தை யார் நிச்சயிப்பது? அதே சமயத்தில், இந்தியாவில் இருந்து குப்பைகள் வருகின்றன என்று கண்ணீர் வடிக்கும் இவர்கள் இந்திய முதலாளித்துவத்தின் அப்பனுன மேற்கத்திய ஏகாதிபத்தியம் நேரடியாக இந்நாட்டில் இதேவகையில் ஊடுருவுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதில்லை. அவ்வாறு பார்த்தால் எத்தனையோ உண்மைகள் தெரியவரும். தமிழ்ப் பத்திரிகைகளை விடப் பன்மடங்கு மோசமான - நூல்களும் சஞ்சிகைகளும் எதுவிதத் தங்குதடையின்றி அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து குவிகின்றன. இவை எமது ''தேசிய'' கலாச்சாரத்தைப் பாதிப்பதில்லையா? அல்லது இதிலும் அதாவது அந்நியப் பதிப்பிலும் தரவேறுபாடு உண்டா? சென்ற வருடம் இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இந்திய வங்கிகளைத் தேசியமயமாக்கிய அரசு, அந்நிய (அமெரிக்க, பிரித்தானிய) வங்கிகளைத் தொடவில்லை. அதுபோல, இப்பொழுது கூக்குரலிடும் ''முற்போக்குவாதிகள்'' இந்திய முதலாளித்துவத்தைக் கண்டித்துவிட்டு, கொழுத்த மேற்கத்திய ஏகாதிபத்தியத்தை நோக்காதுவிட்டு விடுகின்றனரே! உலக வங்கியிடம் மோத அச்சமோ? அல்லது தேசியப் பிரச்சினைகளை இன, வகுப்புவாத கோஷங்களால் மூடிமறைத்து வந்த பழக்கத்தோஷமோ? இவற்றையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

— தொடரும்

# இ. போ. ச.வில் முக்கூட்டணியினரின்
# ஐக்கியம் சிதறுகிறது

இ. போ. ச. ரத்மலானை டிப்போவில் முக்கூட்டணியினரின் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி கலைக்கப்பட்டு விட்டதாக அறியவருகிறது. ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்துச் சங்கமும், திரிபுவாதிகளின் தொழிற்சங்கமும் தமது நிலையை விளக்கிப் பிரதமருக்கும், போக்குவரத்து அமைச்சருக்கும் அறிவித்துள்ளன.

இச் சங்கங்களின் உத்தியோக பூர்வமான அறிக்கையில், சமசமாஜிகளின் தொழிற்சங்கம் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளது. ''சமசமாஜிகளின் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் தன்னிச்சைப்படி செயல்படுவதால் எமது சங்கங்கள் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியிலிருந்து விலகிக் கொள்கின்றன. தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளினாலும், காட்டிக்கொடுக்கும் செயல்களினாலும், மோசமான நிர்வாகத்தாலும் இ. போ. ச. நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதற்குச் சமசமாஜிகளின் தொழிற்சங்கமும் பொறுப்பு என கூறப்பட்டுள்ளது.

எமது ''தொழிலாளி''யும், சி. டி. யு. எப்.பின் தலைமையிலுள்ள இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கமும் இ. போ. ச. நிர்வாகத்தின் ஊழல்களையும், அமைக்கப்படும் 'ஊழியர் சபை'' களையும், முக்கூட்டணியின் போலி ஐக்கியத்தையும் பற்றி பல தடவை அம்பலப்படுத்தி வந்துள்ளன. முக் கூட்டணியினரின் பொய்ப்பிரச்சாரங்களுக்கு பலியான இ. போ. ச. தொழிலாளர்களுக்கு முக்கூட்டணியினரின் போலித் தொழிற்சங்க ஐக்கியம் பற்றிய செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன; அவர்களின் கண்களும் திறக்கப்படுகின்றன. போராட்ட உணர்வுள்ள இ. போ. ச. தொழிலாளர்கள் உண்மையை உணரவேண்டும். சரியான போராட்டத் தலைமை தரும் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் தமது உரிமைகளை வென்றெடுக்க அணிதிரள வேண்டும் என்பதையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா சங்கத்தின் ரத்மலானை டிப்போவிலுள்ள முக்கியஸ்தர்ஒருவர்பைலைகக்கத்தில் வைத்துக் கொண்டு டிப்போவைச் சுற்றி அலைவதற்கு அவரின் டிரைவர் சம்பளத்துக்கும் கூடுதலாக மாதம் 500 ரூபா மேலதிக சம்பளமாக கிடைக்கிறது என்ற பிரச்சினை ரத்மலானை டிப்போவில் தொழிலாளர் மத்தியில் எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்துச் சங்கமும், திரிபுவாதிகளின் தொழிற்சங்கமும் பிரதமருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதம், கொள்கையற்ற பாராளுமன்ற ''ஐக்கியத்தை''க் கூறிக் கொண்டே ஒருவருக்கொருவர் கழுத்தறுப்பதைப் புலனாக்குகிறது.

அக்கடிதம் வருமாறு:

கௌரவ அமைச்சர் அவர்களே

கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட்டபின் பின் அதை திறமையுடன் நடத்துவதற்கு முழு தொழிலாளி வர்க்கமும் ஆதரவு அளிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொண்ட எமது சங்கங்கள், இ. போ. ச. போன்ற முக்கியமான தேசிய கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்காக ஒத்துழைப்பு அளிப்பதென நாம் தீர்மானித்து அதனை கடைப் பிடித்துள்ளோம்.

இ. போ. ச.வுக்கு தலைவரை நியமிப்பதில் நாம் முன்பு எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும் இ. போ. ச. வின் பொதுவளர்ச்சிக்காக இ. போ. ச. வில் உள்ள தொழிற் சங்கங்களிடையே ஐக்கியத்தை உண்டு பண்ணுவதன் மூலம் இ. போ. ச. வின் சேவையை சிறந்தாக்க முடியும் என நம்பினோம்.

ஆனால், அந்த நல்ல நோக்கங்கள் இ.போ.ச.வுக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டதும், சிதறிவிட்டது. முக்கூட்டணித் தொழிற் சங்கங்களுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் வளரத் தொடங்கி உக்கிரமடைந்துள்ளதோடு, அற்ப நோக்கத்துக்காக ஐக்கியத்துக்கு உலை வைக்கும் செயல்கள் பெருகி வருகின்றன; தொழிற்சங்களுக்கிடையேயுள்ள ஐக்கியத்துக்கு எதிரான செயல்கள் கூடிவருகின்றன. இதனால் இ.போ. ச. வின் வளர்ச்சிக்கு ஆபத்து ஏற்படும் நிலை தோன்றியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இ. போ. ச. வில் தற்போதுள்ள நிர்வாகத்தினரும் ஆரம்பத்திலேயே கூட்டணியின் முக்கிய தொழிற்சங்கங்களுடன் கலந்து பேச்சுவார்த்தை நடத்தி இ. போ. ச. நிர்வாகத்தை புனரமைக்க வேண்டும் என கேட்டிருந்தோம். அது இது நாள்வரை நடைபெறவில்லை.

மேலே நாம் கூறியபடி கூட்டணி, தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதைப் புறக்கணித்துவிட்டு டிப்போ மட்டத்தில் நடவடிக்கைகள் எடுத்ததால் இன்று இ. போ. ச. டிப்போத் தொழிலாளர்களும், வேறு பகுதி தொழிலாளர்களும் பெருங் குழப்பமடைந்திருக்கிறார்கள். இதனால் தொழிற்சங்க கூட்டு மோசமடைந்துள்ளது. எதிரிகள் நன்மையடைந்துள்ளார்கள். உண்மையான தொழிலாளர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

தற்போது, இ. போ. ச. வில் அதிகாரம் படைத்தவர்களில் தன்னிச்சைப்படி நிர்வாகிகளைத் திசைதிருப்புகிறார்கள். நாங்கள் எதிர் பார்க்காத அளவில் சம்பவங்கள் நிகழ்கின்றன. நாங்கள் பத்திரிகைகள் வாயிலாக அறிந்துள்ளபடி அமைக்கப்பட விருக்கும் ஊழியர்கள் ஆலோசனை சபை பற்றி எமக்கு எள்ளளவும்விஸ்வாசமில்லை என்பதையும், அத்தகைய ஊழியர் சபைகள் அமைக்கப்படுவதாயிருந்தால் முதலில் முக்கியமான தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெளிவுபடுத்த வேண்டும் என்பதையும், அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்வதோடு, இதற்குமாறாக ஊழியர் ஆலோசனை சபைகள் அமைக்கப் படுவதாயிருந்தால் அதற்கு எமது ஒத்துழைப்பு இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## அசீஸ்-சமர்வில் சந்திப்பு
## அசீஸின் துரோகம் அம்பலம்

கீனாகலை தோட்டத்திற்குப் போவதாக பத்திரிகையில் விளம்பரப்படுத்தி, தோட்டத்திற்குப் போய் தொழிலாளரைக் காண்பதற்குப் பதிலாக சமர்வில் துரையைக் கண்டு பேசி பங்களாவைப் பார்வையிட்டார் அசீஸ். இது அசீஸின் துரோகத்தை மேலும் அம்பலப்படுத்தியுள்ளது.

அசீஸ் கீனாகலை போராட்டத்தை ஆதரிக்காதது, அடையாள வேலைநிறுத்தில் பங்குகொள்ள வேண்டாமென வேண்டுகோள் விடுத்தது, தோட்டத்திற்குப் போய் சமர்விலைச் சந்தித்தது, அசீஸ் பிற்போக்குச் சக்திகளின் ஏஜெண்டு என்பதைக் காட்டுகின்றது.

---

# மலையகத்தில் . . . . .

◎ 1-ம் பக்கத் தொடர்

வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஏஜண்டுக்கு எதிராக கீனாகலை தொழிலாளர்கள்நடத்திய போராட்டத்தை நசுக்க இந்த அரசாங்கம் பல வழிகளிலும் துரையோடு ஒத்துழைத்தது. இந்த அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கை நன்கு வெளிப்படுத்துகின்றது.

வெள்ளைக்கார சமர்வில் போராட்டத்தை முறியடிக்க ரேசன் அரிசியைக் கொடுக்க மறுத்தான்; இதை அரசாங்கம் ஆதரித்தது. அரிசியை கொடுக்க மறுத்த போதும் போராட்டம் உடையாததால், வகுப்புவாதத்தை தூண்டி தோல்விகண்டான் சமர்வில். தொண்டமானையும் அசீசையும் உபயோகித்து போராட்டத்தை உடைக்க முனைந்த சமர்வில், இதிலும் தோல்வி கண்டான். இறுதியாக பிற்போக்கு அரசியல் இயந்திரத்தின் அங்கமான பொலிசை உபயோகித்தான் சமர்வில். இதற்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பைத் தந்துள்ளது.

பொலிஸார் இரு தொழிலாளரை மிருகத்தனமாக சுட்டுக் கொன்றதோடு, இறந்தவர்களின் உடலைக்கூட கொடுக்க மறுத்தனர். செங்கொடிச் சங்கத் தலைவர்களை தோட்டத்திற்குள் வரவிடாமல் தடை செய்தனர்.

இந்தச் சம்பவங்கள் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராகவும், இந்த அரசாங்கத்திற்கெதிராகவும் ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளன. அதோடு கீனாகலை போராட்டத்தை முறியடிக்க அசீஸ்—தொண்டமான் காங்கிரசுகள் கையாண்ட கேவலமான ஈனச் செயல்கள் இவர்கள்மேல் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன.

கீனாகலை போராட்டத்திற்கு ஆரம்பத்திலிருந்தே தலைமை கொடுத்து, இப் போராட்டத்திற்கு ஆதரவாக மலைநாடெங்கும் செங்கொடிச் சங்கம் 9ந் திகதி அடையாள வேலைநிறுத்தம் நடத்தியது, தோட்டத் தொழிலாளர் மத்தியில் போராட்ட உணர்வை வளர்த்துள்ளது.

---

## செங்கொடிச் சங்கம் பாராட்டுகின்றது.

செங்கொடிச்சங்கத்தின் அறைகூவலை ஏற்று 9ம் திகதி அடையாள வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட சகல யூனியன்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும் ஊவா மாவட்ட தோட்ட சேவையாளர்களையும் செங்கொடிச் சங்கம் பாராட்டுகின்றது.

---

## செப். 16 ல் அடையாள வேலைநிறுத்தம்
### செங். சங்கம் தீர்மானம்

கீனாகலை துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து செங்கொடி சங்கம் செப்டம்பர் 16ந் தேதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நடத்த தீர்மானித்துள்ளது. கடந்த 9ந் தேதியும் இதே காரணத்துக்காக ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நடத்தியது தெரிந்ததே.

---

* கீனாகலையில் பொலிஸ் அட்டூழியத்தை கண்டிக்கவும்;

* போராட்டத்தில் உயிர் தியாகம்செய்த தியாகிகளான ராமையா, அழகர்சாமிக்கு அஞ்சலி செலுத்தவும்;

* அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத நடைமுறையைக் கண்டிக்கவும்;

# மாபெரும்கூட்டம்

## 22-9-70 செவ்வாய் பிற்பகல் 5 மணிக்கு
## யாழ்-நகர மண்டபத்தில்

- வட-பிரதேசத்தில் உள்ள சகல தொழிற் சங்கங்களும்; வெகுஜன ஸ்தாபனங்களும் பங்கெடுக்க அழைக்கப் பட்டுள்ளனர்.
- இலங்கை தொழிற் சங்க சம்மேளனத் தலைவரும், மலையக செங்கொடிச் சங்க பிரதிநிதிகளும் பங்கெடுப்பர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்
வட-பிரதேசக் கிளை

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2